இலவசப் பிரதி

Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ராம் கோ

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து


ராம் கோ

(சீ-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 29 (02.02.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :124



புறப்படமுன்னர் மகிழ்ச்சியில் விண்வெளி வீரர்கள்.



கொலம்பியா விண்கலம் புறப்பட்டுச் சென்ற காட்சி.



லோரல் கிளார்க்



இலான் ரமோன்
இஸ்ரேலியர்



கொமாண்டர் ஹஸ்பண்ட்



வில்லியம் மக்கூல்



மைக்கல் அண்டர்சன்



டேவிற் ப்ரௌன்



கல்பனா சவ்லா
இந்தியப் பெண்

# அமெரிக்க விண்கலம் வெடித்துச் சிதறியது!

## நேற்றிரவு தரையிறங்கச் சற்று முன்னர் பயங்கரம்

(ஹொஸ்டன்)


விண்வெளிக்குச் சென்றிருந்த அமெரிக்காவின் 'கொலம்பியா' விண்கலம், நேற்று (ஜி.எம்.ரி. நேரம் 14.16) தரையிறங்குவதற்குச் சற்று முன்பாக வானில் வெடித்துச் சிதறியதில், அவ்விண்கலத்தில் பயணம் செய்த ஒரு இந்தியப் பெண், இஸ்ரேலியர் ஒருவர் உட்பட ஏழு விண்வெளி வீரர்களும் கொல்லப்பட்டனர். வெடித்துச் சிதறிய விண்கலத்தின் துண்டுகள் பெரும் தீக்கங்குகளாக ரெக்ஸாஸ் மாநிலத்தில் விழுந்தன.

அமெரிக்காவின் 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தால், கடந்த 16 நாட்களுக்கு முன்னர் விண்வெளிக்குச் செலுத்தப்பட்ட 'கொலம்பியா' விண்கலம், திட்டமிட்டபடி நேற்றிரவு கென்னடி விண்வெளி நிலையத்தில் தரையிறங்கத் தயாரானது.

ஆனால், பூமியிலிருந்து 207,000 அடி தொலைவில் (ஏறத்தாழ 160 கி.மீ), 20,000 கிலோ மீற்றர் வேகத்தில் வந்து கொண்டிருந்த போது, திடீரென அவ்விண்கலத்துடனான தொடர்புகள் துண்டிககப்பட்டன.

அவ்வேளை-பாரிய (10 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியப் பெண், இஸ்ரேலியர் உட்பட 7 விண்வெளி வீரர்கள் பலி



வெடிக்கிறது கொலம்பியா

# சிறுவர் நலனைப் பேணுவதில் விடுதலைப்புலிகள் அக்கறை

## பாராட்டும் திருப்தியும் தெரிவிக்கிறார் யுனிசெப் பணிப்பாளர்



(கொழும்பு)

**சிறுவர் தொடர்பான கல்வி விடயங்கள் உட்பட -சிறுவர் நலனைப் பேணுவதில் விடுதலைப்புலிகள் காட்டிவரும் அக்கறை பற்றிப் பாராட்டும் திருப்தியும் தெரிவிக்கிறார், யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெலாமி. வன்னி சென்றதன் பின்னர் கொழும்பில் செய்தியாளரிடம் பேசும்போதே, அவர் இவ்வாறு கூறினார். தமது அமைப்பில் சிறார்களை சேர்ப்பதில்லையென புலிகள் உறுதியளித்திருப்பதில் தாம் திருப்தியடைவதாகவும் அவர் கூறினார்.**

தனது நான்கு நாள் விஜயம் தொடர்பாக விளக்கும் பத்திரிகையாளர் மாநாட்டை, நேற்றுப் பிற்பகல் கொழும்பு ஹில்டன் ஹோட்டேலில் அவர் நடத்தினார்.

அங்கு விளக்கமளித்த அவர், மாதத்திற்கு ஒவ்வொரு தடவையும் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து சிறுவர் நல உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் சிறுவர்களையும் போரில் ஈடுபடுத்துகின்றார்கள். அவர்களுக்கு பயிற்சி அளிக்கின்றார்கள் என, 730 முறைப்பாடுகள் யுனிசெப் நிறுவனத்திற்கு கிடைத்திருந்தன.

அந்த முறைப்பாடுகள் தொடர்பாக வன்னி சென்று புலிகளின் அரசியல் பிரிவுத்தலைவர் சு. ப தமிழ்ச்செல்வனுடன் பேசினேன். அதற்கு அவர் அளித்த பதில் திருப்தியாக உள்ளது எனத் தெரிவித்த பெலாமி, (10 ஆம் பக்கம் பாக்க )

## ராணுவத்தினரை மடக்கிய விழிப்புக் குழுவினர் கைது

நடுக்குடத்தனையில் நேற்று முன்தினமிரவு வேளையில், வீட்டினுள் நுழைய முற்பட்ட இரு இராணுவத்தினர் விழிப்புக்குழுவினால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, விழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் எட்டு இளைஞர்களை நேற்றுப் பொலிசார் கைது செய்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்பட்ட பொருட்களுக்கு 2.5 கோடி ரூபா கொடுப்பனவு

### வணிகர்களுக்கு புலிகள் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த 2000 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற யுத்தத்தின்போது, சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து விடுதலைப் புலிகளால் மீட்டெடுக்கப்பட்ட சுமார் 2 கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும், ஆவணங்களும் நேற்று முனதினம் மீள வழங்கப்பட்டன.

பளை வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடந்த நிகழ்வில் புலிகளால்-சொத்துக்கள் மீட்கப்பட்ட 46 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட நிதிப் பொறுப்பாளர் மருதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிதி கையளிப்பு நிகழ்வில், (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயங்களில் குடியேற மக்களுக்கு உடன் அனுமதி தேவை

### கத்தோலிக்க ஆயர்கள் வேண்டுகோள்

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு, அரசாங்கம் உடனடியாக இணக்கம் தெரிவிக்க வேண்டும் என, வடக்கு- கிழக்கு மாகாண கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சமாதானச் சூழ்நிலையில் அவ்வாறான ஒரு பாதுகாப்பு வலயம் தேவையில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.கொழும்பில் இருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்றிற்கு ஆயர்கள் வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் (10 ஆம் பக்கம் பாக்க )

### விண்ணாணம் விநாசியர்



ஈராக்கில வெடிக்கும் எண்டு பாத்தால் ரெக்ஸாஸில எல்லோ வெடிச்சுப் போச்சுது...!

## தமிழீழ தேசிய விளையாட்டு விழா வரும் 20 இல் கிளிநொச்சியில்

### பிரமாண்டமாக நடாத்த ஏற்பாடு

(நமது நிருபர்)

தமிழீழ விளையாட்டுத்துறையினர் நடாத்தும், தமிழீழ தேசிய பெரு விளையாட்டுப் போட்டி -2003, இம்முறை இரண்டாவது தடவையாக எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் பெருமெடுப்பில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பத்து நாட்களுக்கு இரவு பகலாக நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில், தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டோர் பங்குபற்றவுள்ளனர்.

இவ் விளையாட்டுப் போட்டியில், ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தலா 60 பேர்வரை பங்கேற்பர் என, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

கேணல் சங்கர் நினைவுக்கிண் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சீ-518)

**ராஜா**
யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த

**வசீகரா**



10.30, 2.30, 6.00, 9.30 (சி-544)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

எம்.ஜி.ஆர்., ராஜசலூஜா நடித்த

**இதயக்கனி**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி

**TOMB RAIDER** (சி-545)

# சிறு விளம்பரம்

## கடைகள் விற்பனை

சாவகச்சேரி AGA அலுவலகம் முன்பாக மூன்று கடைத் தொகுதி விற்பனைக்குண்டு. தொடர்புகள்: செவ்வந்தி, நவீன சந்தை, சாவகச்சேரி. T.P இல. 070 - 212961 (227)

## தேவை

எமது தொழிலகத்திற்கு வேலை பழகிய, பழக விரும்புகிற துடிப்புள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. வியாழக்கிழமைக்கு முன்பு (06.02.2003) நேரில் வரவும். ஸ்ரீ மாருதி ஸ்ரார் இனிப்புத் தொழிலகம், சுரோஸ இன்டஸ்ரீஸ், 6/12, விதானையார் வீதி, சுண்டுக்குளி. (223) (சி-547)

## சமையலாள் தேவை

எமது ஸ்தாபனத்தின் இயக்குனர்களின் வதிவிடத்தைப் பராமரிப்பதற்கும் சமையல் வேலை செய்வதற்கும் அனுபவம் வாய்ந்த சமையலாள் தேவை. மேல்நாட்டவருக்கு ஏற்ப சமையல் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இயக்குநர், புறோ மோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட், இல. 844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-531)

## ஓட்டோவும் சாரதியும் தேவை

எமது ஸ்தாபனத்தில் காலை 8.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை, வாடகைக்கு வேலை செய்யக்கூடிய **Auto (Tri - Show)** வும், சாரதியும் தேவை. மாதாந்த அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும். தொடர்பு: இயக்குநர், புறோ மோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட். (சி-535)

## பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை

எமது ஸ்தாபன வளாகத்தி லும் இயக்குநர்களின் வதிவிடத திலுமுள்ள பூந்தோட்டங்களை வடிவமைத்துப் பராமரிப்பதற்கு அனுபவம் வாய்ந்த பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை. அனுபவங்களின் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இயக்குநர், புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட். (சி-536)

## அலுவலகப் பணியாள் (பியோன்) தேவை

எமது அலுவலகத்துக்கு க.பொ.த. சா/த தேர்ச்சிபெற்ற, சுயமாக சுறுசுறுப்பாக வேலைசெய்யக்கூடிய 20 வயதுக்குட்பட்ட பணியாள் (பியோன்) தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இயக்குநர், புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட். (சி-537)

## புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

### வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல் துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்குச் சேவை செய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து தெற்காசியப் பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்குச் சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு அவை இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், துருக்கி, யூக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இப்பொழுது நாம் சர்வதேச தராதரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

### Engineering Assistant (Mechanical)

N.D.T Mechanical Engineering தேர்ச்சியுடன் தனியார்துறையில் குறைந்தது 5 வருடம் Fabrication workshop இல் வேலை செய்த அனுபவத்துடன் சுயமாகச் சிந்தித்து செயல்படுபவரும் வேலையாட்களைச் சிறந்த முறையில் வழிநடத்தும் ஆற்றலுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

### கணக்காளர் (Accountant)

சுயாதீனமாகச் சகல கணக்குப் புத்தகங்களையும் எழுதிக் கணக்காய்வுக்கு உட்படுத்தக்கூடிய ஆற்றலுடையவராக இருக்க வேண்டும். முகாமைத்துவத்திற்குத் தேவைப்படும் கணக்குத் தகவல்களைச் சீராகவும், தகுந்த நேரங்களிலும் வழங்கும் ஆற்றல் மிக அவசியமானது. ஆங்கிலத்தில் ஆற்றலுள்ளவர்களுக்கு (Fluency in English) முன்னுரிமை வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்துறையில் பகுதிச் சான்றிதழ்களுடன் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 10.02.2003.**

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிட்டெட்.
*இல.844, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (சி/532)

## இன்றைய நாள் இனிய நாள்

**02-02-2003 - ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- பிரயாணத்தால் நன்மை, உறவினர் வருகை, குடும்ப மகிழ்ச்சி. |
| இடபம் | :- தொழில் முன்னேற்றம், காரிய தாமதம், தேக சுகம், தனலாபம். |
| மிதுனம் | :- மனக்கவலை, அன்னியர் உதவி, நிலை பிரிவு, தனலாபம் |
| கர்க்கடகம் | :- தேகபீடை, காரிய வெற்றி, குடும்பசுகம், பிரயாசை. |
| சிங்கம் | :- பிரயாணம், பூமி, வாகன யோகம், வியாதி, சோர்வு. |
| கன்னி | :- தன வரவு, வெற்றி, குடும்ப மகிழ்ச்சி, பெரியோர் உதவி. |

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- காயம், அதிக அலைச்சல், தேக பீடை, லட்சுமி கடாட்சம். |
| விருச்சிகம் | :- மனப்பயம், காரிய வெற்றி, பிரயாசை, குடும்ப சுகம். |
| தனு | :- அயலவருடன் சர்ச்சை, திரவியலாபம், பிரயாண கஷ்டம் |
| மகரம் | :- களஸ்திரசுகம், கொண்டாட்டம், தொழில் சிறப்பு, லாபம். |
| கும்பம் | :- தேகசுகம், காரிய வெற்றி, நிலைப்பிரிவு, மனக்கிலேசம்.. |
| மீனம் | :- லட்சுமீகரம், திரவியலாபம், பெண்களால் நன்மை, மகிழ்ச்சி. |

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்யுங்கள் நமது ஈழநாட்டில்

## புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்

### வெற்றிடங்கள்

எமது ஸ்தாபனம் பொறியியல் துறையில் கடந்த 25 வருடங்களாக யாழ்.மக்களுக்கு சேவை செய்து வந்துள்ளது. எமது ஸ்தாபனத்தின் கூட்டமைப்பு இத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு முன்னணி நிறுவனமாக திகழ்கின்றது. எமது கூட்டமைப்பு உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களின் சிறந்த தராதரத்தினால் அவற்றுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்பட்டு அவை இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், துருக்கி, யூக்கிரேன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இப்பொழுது நாம் சர்வதேச தராதரமுள்ள இயந்திரங்களை யாழ்ப்பாணத்தில் தயாரித்து ஏற்றுமதி செய்யவுள்ளோம். இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எமது அமைப்பில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. கடைச்சல் இயந்திர இயக்குநர் (லெத்மன் - Lathe Man)
2. மில்லிங்மெசின் இயக்குநர் (Milling Machine Operator)
3. தகட்டு வேலைத் தொழிலாளி (Sheet Metal worker / Fabricator)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாக சிந்தித்து செயல்படும் ஆற்றலுள்ள சுறுசுறுப்பு மிக்க குறைந்தது 10 வருட அனுபவமுள்ள தரமான வேலை செய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர் தேவை.

நற்சாட்சி விபரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 10-02-2003**

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங்
கம்பனி லிமிட்டெட்.
*இல. 844, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(சி-534)

## மக்கள் வங்கி

### மக்கள் வங்கி பருத்தித்துறை கிளை மீட்கப்பெறாத அடகு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை

மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளையில் 31.12.1984 வரை அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 15.02.2003 அன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கியில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

10.12.2002. (சி/549)

## மனநிறைவுடன் நன்றிகள்



2000 ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது, சாவகச்சேரி நகரில் இருந்து எமது சொத்துக்களை விட்டு வெளியேறியபோது 46 வணிக நிலையங்களில் இருந்து எமது சொத்துக்களையும் ஆவணங்களையும் மீட்டு அதற்குரிய பெறுமதியை 31.01.2003 அன்று, பளை வருவாய்ப் பகுதி செயலகத்தில் கையளித்த,

தமிழீழ - நிதித்துறைப் பொறுப்பாளர் அவர்களுக்கும், யாழ்.மாவட்ட நிதிப் பொறுப்பாளர் அவர்களுக்கும், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர், சேரன், இளவேனில் பொறுப்பாளர்களுக்கும்

கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர், நிர்வாக உறுப்பினர் அவர்களுக்கும், மல்லாவி வர்த்தக சங்க தலைவர், நிர்வாகஉறுப்பினர் அவர்களுக்கும் இப்பொருட்களை மீட்டெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றிகள்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்,**
**சாவகச்சேரி.**

(சி/550)

# ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை அரசின் உத்தியோகபூர்வ கருத்தல்ல!

## அமைச்சர் ராஜித சேனரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயங்களில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்



குடியமர்த்துவது தொடர்பாக இந்திய இராணுவ முன்னாள் அதிகாரி ஜெனரல் சதீஸ் நம்பியார் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கை, அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையல்ல.

இவ்வாறு காணி அமைச்சர் ராஜித சேனரட்ன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் இடம்பெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைக்கு, அடுத்த கட்ட பேச்சின்போது பேசித் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்த அவர், தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாகத் தென்னிலங்கைச் சிங்களப் பத்திரிகைகள் திரிபுபடுத்தி கூறுவதாகக் குற்றஞ்சாட்டினார். ஊடகங்கள் தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பான உண்மை நிலையை மக்களுக்கு வழங்குவதில்லை எனவும் தெரிவித்தார்.

வடக்கில் இரண்டு இலட்சம் மக்களை மீளக்குடியமர்த்தும் திட்டம் உண்டு. இதற்கு உலகவங்கி வழங்கிய நிதி அரசிடம் உண்டு எனத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடைய நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள் தொடர்பாகப் பெரிதாக எதுவும் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

1993 ஆம் ஆண்டு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் 16 நீதிமன்றங்களும் 33 பொலிஸ் நிலையங்களும் இயங்கின எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(01)

### வழங்குநர் சங்கத்தில் திரைப்படங்களை பெறவேண்டும்

யாழ்.மாவட்டத்திற்குள் புதிய திரைப்படங்கள் மற்றும் கட்டண முறையில் புதிய திரைப்படங்களை கொள்வனவு செய்வதாயின் - யாழ்ப்பாணம், பலாலி வீதியில் இல. 249 இல் அமைந்துள்ள திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டு, கொள்வனவுகளை செய்தல் வேண்டும் என்று இத்தொழில் சார்ந்தவர்களுக்கு யாழ். மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

### திருப்பணிச் சபைக் கூட்டம்

திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் ஆண்டுப் பெரதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# குற்றச்சாட்டை ஒருவாரத்துள் நிரூபிக்காவிடில் அமைச்சர் மகேஸ்வரன் மீது சட்ட நடவடிக்கை!

## ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அறிவிப்பு

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மீதும், அதன் தலைவராகிய என் மீதும் திட்டமிட்ட முறையில் பழிசுமத்தும் விதமாக இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மைக்காலமாகத் தெரிவித்து வரும் குற்றச்சாட்டுக்களைத் திட்டவட்டமாக மறுப்பதாக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும்,

பிரேமதாஸா ஆட்சிக் காலத்தில் கொடுப்பனவும், ஆயுதமும் எமக்கு வழங்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டின் எமது அமைப்பின் அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக அரசினால் எமக்கு அளிக்கப்பட்டுவந்த நிதி உதவிகள் யாவும் நிறுத்திக் கொள்ளப்பட்டதுடன், எம்மிடமிருந்த ஆயுதங்களும் பறிக்கப்பட்டன.

அதன் பின் இன்றைய நாள் வரை முன்னைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிடம் இருந்தோ, இன்றைய ஐக்கியதேசிய முன்னணி அரசிடம் இருந்தோ கட்சியின் தலைவர் என்ற ரீதியில் நானோ அன்றி கட்சி சார்பில் வேறு ஒருவரோ ஒரு சதமேனும் பெறவில்லை.


இந்நிலையில், நாம் அரசிடம் இருந்து மாதாந்தம் நிதி உதவி பெறுவதாக அடிக்கடி கூறிவரும் அமைச்சர் மகேஸ்வரன் - உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும்.

புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கப் போவதாகக் கூறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் மகேஸ்வரன் - பொறுப்பற்ற வகையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டுபோவதை விடுத்து, தனது கூற்றை நிரூபிக்க முன்வரவேண்டும்.

இன்றிலிருந்து ஒருவாரத்திற்குள் அவர் தனது கூற்றை நிரூபிக்காதுவிடில், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என எச்சரிக்கிறேன்.

மகேஸ்வரன் இக்கூற்றை நிரூபிக்கின்ற பட்சத்தில், எனது அரசியல் வாழ்க்கையைத் துறப்பேன் என்பதை உறுதியுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சரிந்து வரும் தனது அரசியல் செல்வாக்கைத் தூக்கி நிறுத்த வேறுவழிகளைக் கையாள்வதற்கு முயற்சிக்காது, இதுபோன்ற சின்னத்தனமான கருத்துக்களைக் கூறுவதை அவர் உடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் விடிவிற்காக உண்மையிலேயே உழைத்து வரும் எமது கட்சியின் மீது, சேறு பூச முயற்சிப்பதை எம்மால் தொடர்ந்தும் பொறுத்துக்கொள்ள முடியாது.

எமது கட்சியைப்பற்றி அமைச்சர் மகேஸ்வரன் அறியாது போனாலும், தமிழ் மக்கள் நன்கு அறிவர். எந்த ஒரு அர்ப்பணிப்பும் இல்லாமல், எம்மைப்பார்த்துத் தேசத்துரோகிகள் என்று சொல்வதற்கு எந்த யோக்கியமோ, அருகதையோ அமைச்சர் மகேஸ்வரனுக்கு இல்லை என்பதை உணர்த்த விரும்புகி



றேன்.

எந்த அரசிடமும் நாங்கள் கடமைப்படவில்லை. புதிய அரசு சமாதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளபடியால், இந்த அரசாங்கத்தை ஆதரிக்கின்றோம். இந்த அரசாங்கமும் எமது மக்களுக்கு ஏமாற்றத்தைத் தரப்போகின்றது என்று கண்டால், முதலில் எதிர்க்கின்றவர்களில் நாங்களும் ஒருவராக இருப்போம் என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது கட்சி ஜனநாயக மரபுகளைப் பேணும் ஒரு கட்சி. இக்கட்சியில் முக்கிய முடிவுகள் கூட்டாகவே எடுக்கப்படுகின்றன என்பதையும் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, அமைச்சர் மகேஸ்வரன் தனது கூற்றை ஒரு வாரத்தினுள் நிரூபித்துக் காட்ட வேண்டும். இல்லாவிடின் நீதிமன்றில் பதில் சொல்ல வேண்டிவரும் என்பதை ஆணித்தரமாகக் கூறி வைக்க விரும்புகின்றேன் என ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### இராணுவ வரைபடங்களின் உதவியுடன்

# துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ள கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு!

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகள் அகற்றுவதற்கான செயற்திட்டத்தை நடைமுறைபடுத்துவது பற்றி ஐ.நா. அபிவிருத்தித்திட்டத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு நேற்றுமுன்தினம் முக்கிய கூட்டமொன்றை நடத்தியது.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு, நோர்வேயின் பீப்பிள்ஸ் எயிட் ஆகிய அமைப்புக்களின் நிபுணர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் -

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பது பற்றிய இராணுவத்தினரின் வரைபடங்கள், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டன.

# இறுதி நேரத்தில் ரத்தான விஜயம் மகிந்த இன்று இந்தியா செல்கிறார்

## ஊடகங்களுக்குத் தகவல் கசிந்ததே காரணமாம்

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் இந்தியாவுக்கான இரகசிய விஜயம் குறித்த தகவல் ஊடகங்களுக்குக் கசிந்ததால், அவரது பயணத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் விசேட அழைப்பின் பேரில் பயணத்தை மேற்கொள்வதற்காக நேற்றுமுன்தினம் நள்ளிரவு மகிந்த ராஜபக்ஷ தயாராக இருந்தார். மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இவரது விஜயம் தொடர்பான செய்தி, ஊடகங்களுக்குக் கசிந்ததையடுத்து, நேற்றுமுன்தினம் நள்ளிரவு தனது பயணத்திட்டத்தை இறுதி நேரத்தில் ரத்துச்செய்துவிட்டதாக தெரியவருகின்றது. மகிந்த ராஜபக்ஷ, இன்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்வார் எனத் தெரியவருகின்றது. இவர் இந்தியத் தலைவர்களையும், பாதுகாப்பு அதிகாரிகளையும் சந்திக்கத் திட்டமிட்டிருப்பது குறிப்பிடத்தககது.

(01)

# நான் முஸ்லிம்களின் பிரதிநிதியல்ல; பாலா கூறியது சமூக அவமதிப்பு!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

தமிழ் மக்களுக்கு அரசியல் அபிலாஷை இருப்பதுபோல முஸ்லிம்களுக்கும் அபிலாஷைகள் இருப்பதைத் தமிழ் மக்கள் உணர வேண்டும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் மக்கள் வன்முறையில் இறங்குவதை தடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கே உள்ளது. ஒலுவிலில் முஸ்லிம் தேசப் பிரகடனம் உலகத்திற்கு நல்ல செய்தியை எடுத்துக் கூறியிருக்கிறது.

முஸ்லிம்களைப் பேச்சுவார்த்தையில் ஒரு பகுதியினராகக் கருத வேண்டுமே தவிர, பிரச்சினைக்குரிய தரப்பு என எவரும் கருதக் கூடாது எனத் தெரிவித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம்,

புலிகளின் அரசியல் ஆலோசகர் தெரிவித்த கருத்துக்கள் நியாயமற்றதென்றும், இப்படியான கருத்து, முஸ்லிம் சமூகத் தலைவர் ஒருவரை அவமதிப்புக்குள்ளாக்கும் ஒன்றாக அமைந்திருப்பதாகவும் கூறினார்.

### இந்திய விமானக் கட்டணம் நாளை முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கான விமானக்கட்டணம் நாளை தொடக்கம் 25 சதவீதத்தால் உயர்த்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கான கட்டணங்கள் மாத்திரமே உயர்த்தப்பட இருப்பதாக எயர்லங்கா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# வேலை வாய்ப்பில்லாதிருக்கும் 21 ஆயிரம் பட்டதாரிகள்!

இலங்கை முழுவதும் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய 20,790 பட்டதாரிகள் வேலையற்று இருக்கிறார்கள் என்று அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டதாரிகளில் 17,590 பேர் கலைப் பட்டதாரிகளாவர்.

இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும், உலகவங்கியின் உதவியுடனே இது அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கபீர் காசிம் மேலும் தெரிவித்தார்.



நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் பிரதம விருந்தினர் நாட்டியவேள் வேல் ஆனந்தன் வெற்றியீட்டிய இல்லத்திற்கான வெற்றிக் கேடயத்தை வழங்குகிறார். (113)

# யாழ். சட்டம், ஒழுங்கைப்பேண பொலிஸார் பற்றாக்குறையா?

## நீதித்துறை அதிகாரிகள் ஆராய்வு

யாழ்ப்பாணத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் முழுமையாக அமுல் பத்துவதற்குப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக உள்ளனரா என்பது குறித்து, யாழ். நீதித்துறை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் குடாநாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் முழுமையாக அமுல்படுத்த முடியாமல் உள்ளது என்ற விடயம், நீதித்துறை அதிகாரிகளின் கவனத்திற்குத் தற்போது கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து, யாழ். நீதிபதிகள் பலர்- யாழ். பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டபோது, தற்போது யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்குச் சட்டம், ஒழுங்கை முழுமையாக அமுல்படுத்துவதற்கும், சட்டத்தையும், ஒழுங்கையும் மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும் போதுமானளவு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இல்லை என்று கூறப்பட்டு வந்தது

இவ்விடயம் தொடர்பாக மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்யமுடியுமா என்பது குறித்துத் தற்போது நீதித்துறை சார்ந்த அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். (க,ச)

### பாடசாலைக்கு றோணியோ இயந்திரம்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் றோணியோ இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதி ஒதுக்கீட்டிலிருந்தே றோணியோ இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகக் கல்லூரியின் அதிபர் நா.சண்முகசுந்தரம் தெரிவித்தார். (43)

# போக்குவரத்து அதிகரிப்பால் சேதமாகும் பண்ணைப்பாலம்


(மண்கும்பான்)

பண்ணைப் பாலத்தினூடான போக்குவரத்து அதிகரித்துள்ளதால், சேதமடைந்திருந்த பாலம் மேலும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே பாதிப்படைந்திருந்த இந்தப் பாலத்தினூடாகப் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் குறித்தளவு பாரமுடைய பொருட்களை மட்டும் கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இவ்வீதியூடான வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால், இந்த வீதி மோசமாகப் பாதிப்படைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

(53,ச)



யாழ். அரச அதிபர் பணிமனையில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின்போது கலந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகசேவையைச் சேர்ந்த பொ.இளஞ்சேரன், ச.விஜிதரன் ஆகியோரை முதற்படத்திலும், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம், ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் மகேஸ்வரன், ஆனந்தசங்கரி மற்றும் யாழ். அரச அதிபர் பத்மநாதன் ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்- லிவிங்ஸ்டன்)*

### அராலி வடக்கு இளைஞர் கழக பொதுக்கூட்டம்

(அராலி)

அராலி வடக்கு இளைஞர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 4.00 மணியளவில் அராலி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதால், அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 7

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### மீளாமயக்கம் *(COMA)*

விழிப்பு நிலைக்கு எதிரான அல்லது உயிர்ப்பற்ற நிலை மயக்க நிலை (**UNCONCIOUS STATE**) ஆகும். இந்தநிலை விழிப்பு நிலைக்கு மீண்டு வரக்கூடிய தற்காலிக நிலையாகவும் இருக்கலாம். விழிப்பு நிலைக்கு மீளமுடியாத நிரந்தர மயக்கநிலையாகவும் இருக்கலாம். நிரந்தர மயக்கநிலையே மீளாமயக்கநிலை (**COMA**) என அழைக்கப்படும். மனிதரின் குருதியில் இருக்கும் குளுக்கோஸ் **2.5 m.mol (1 m.mol=18 Mg/dl)** இற்குக் குறையும்போது, குளுக்கோஸ் பற்றாக்குறை ஏற்பட்டு மூளையின் இயக்கம் பாதிக்கப்படும். இதன் அறிகுறியாக வியர்த்தல், குளிர் நடுக்கம், இதயப்படபடப்பு, பசி, குழப்பமான பேச்சு, வலிப்பு, பேசமுடியாதிருத்தல் போன்றனவற்றுள் ஒன்றோ, பலவோ காணப்படும். சிலருக்கு எதிலும் கவனம் செலுத்த முடியாத குழப்பம், குமட்டல், களைப்பு, தலையிடி போன்றவையும் காணப்படும். இதனைக் குணமாக்கும் மருந்து எங்கள் வீட்டிலேயே சாதாரணமாக இருக்கின்ற குளுக்கோஸ், சீனி போன்ற இனிப்புப் பொருட்கள் ஆகும். குளுக்கோஸ் இருந்தால், அதனைக் கொடுப்பது சாலச்சிறந்தது. குளுக்கோஸ் இல்லாவிடில் சீனி, ரொபி, இனிப்புச்சோடா போன்ற சீனி சேர்ந்த பொருட்களில் ஒன்றைக் கொடுக்கவேண்டும். தாமதமின்றிச் சீனி சேர்ந்த பொருள ஏதாயினும் கொடுக்கப்படாவிடில், மீளாமயக்கம் ஏற்பட்டு மரணம் சம்பவிக்கலாம்.

### நோயாளர் அடையாள அட்டை வைத்திருத்தல்

நீரிழிவு, இருதயநோய், அதிக குருதி அழுத்தநோய் போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்ட அனைவரும், தமக்கு மயக்கம் ஏற்படும் வேளையில் முறையான முதலுதவி கிடைப்பதற்காகப் பூரணப்படுத்தப்பட்ட நோயாளர் அடையாள அட்டை ஒன்றை எப்பொழுதும் தம்முடன் வைத்திருக்க வேண்டும். நீரிழிவு நோயாளிகள் - நோயாளர் அடையாள அட்டையையும், குளுக்கோஸ் அல்லது சீனி அல்லது ரொபி போன்ற பொருட்களையும் தம்முடன் வைத்திருத்தல் நன்று. குளுக்கோஸ் பற்றாக்குறையைக் காட்டும் அறிகுறிகள் தென்பட்டதும், தாம் வைத்திருக்கும் இனிப்புப் பொருளை உண்ணவேண்டும். இந்த இனிப்புப் பொருளே, இந்நிலையில் உயிர்காக்கும் மருந்தாகத் தொழிற்படும். குளுக்கோஸ் கூடியதனால் ஏற்படும் தலையிடி, தலைச்சுற்று என்பனவற்றை- தவறாக தாழ் குளுக்கோஸ் (குளுக்கோஸ் குறைநிலை) நிலையினால் ஏற்படுகிறது என எண்ணி, இனிப்புப் பொருட்களை உண்டால் விபரீத விளைவு ஏற்படும்.

*நாளை தொடரும்........*

# பண்டத்தரிப்புத் தொழிற்சாலையில் ஒரு லட்சம் போத்தல்களில் கள்!

(மானிப்பாய்)

பண்டத்தரிப்புப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கள் அடைக்கும் தொழிற்சாலையில் இந்த வருடம் ஒரு இலட்சம் போத்தல்களில் பனம் கள் அடைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இச்சங்கத்தொழிற்சாலையில் 75 ஆயிரம் போத்தலில் அடைக்கப்பட்ட பனம் கள் அனைத்தும் சந்தைப்படுத்தப்பட்டு விட்டதாகச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் கி.குணரத்தினம் தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து சுற்றுலாவுக்காக யாழ்.குடாநாட்டுக்கு வருகை தருவோர், பனங்கள்ளினைத் தாராளமாக வாங்குவதால், சங்கத்தின் தவறணைகள் மூலமாக இவை தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (100)

### சேந்தான்குளம் காவலரண்கள் புனரமைப்பு

(மல்லாகம்)

சேந்தானகுளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமின் முன்னரங்கப் பகுதியிலுள்ள மண் அரண்களும், காவலரண்களும் படையினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு கோரியிருக்கும் நிலையில், படையினர் இந்த இராணுவ முகாமைப் புனரமைத்து வருகின்றமை இந்தப பகுதி மக்களிடையே அதிருப்தியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ச,68)

### தும்பளை லூர்துமாதா யாத்திரைத்தல திருவிழா

(நெல்லியடி)

தும்பளை புனித லூர்து அன்னை யாத்திரைத்தல திருவிழா இன்று மாலை 5.15 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 11 ஆம் திகதி காலை திருநாள் திருப்பலியுடன் முடிவுறும். நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். திருநாள் திருப்பலிகள் 11 ஆம் திகதி காலை 6.30 மணிக்கும், காலை 7.30 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும். (13)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் :கெ.வினோலினி

முகவரி: சேந்தான்குளம், இளவாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------------

முகவரி:-----------------------------------------

பிறந்த ஆண்டு:-----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------------

பெற்றார் ஒப்பம்



யாழ்.பல்கலைக்கழக

கத்தோலிக்க மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக



யாழ்.நியூ வீணாகானத்தின்

பல்லிய நிகழ்வு

யாழ். பல்கலைக்கழக

இளைய தலைமுறைப் பாடகர்களுடன்

யாழ்.புகழ்

ரிதம்ஸ் இசைக் குழு இணைந்து வழங்கும்

ரீங்கார மழை

இடம் : கைலாசபதி கலையரங்கம் (யாழ்.பல்கலைக்கழகம்)

நாள்: இன்று (02.02.2003)

நேரம் : பி.ப. 2.00 மணி



அனைவரையும் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்,

ஊடக அனுசரணை: ஈழநாடு

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# ஊக்குவிப்பும் ஊசலாட்டமும்

✸ உலகக்கிண்ணப் போட்டிகள் அண்மிக்கும் வேளையில் ரிக்கி பொன்ரிங், முரளி இருவருக்கும் ஒரு ஊக்குவிப்பு கிடைத்துள்ளது. இந்திய CEAT நிறுவன சர்வதேசக் கணிப்பில் சிறந்த களத் தடுப்பாளராக ரிக்கி பொன்ரிங்கும், சிறந்த பந்துவீச்சாளராக முரளிதரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சர்வதேச அளவில் சிறந்த அணியாக இருவகை ஆட்டங்களிலும் அவுஸ்திரேலிய அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1997 மற்றும் 2000 இலும் CEAT அவுஸ்திரேலியாவையே சிறந்த அணியாகத் தெரிவு செய்திருந்தது. இதேவேளை, சச்சின் டெண்டுல்கர் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

✸ மீண்டும் பூதம் தெற்கால் புறப்படுகிறது. இம்முறை நியூசிலாந்து பயப்படுகிறது கென்யாவுக்கு. கென்யாவில் தீவிரவாதிகளின் செயற்பாடு அதிகமாக இருப்பதால், அங்கு செல்வது உயிராபத்து என்கிறது நியூசிலாந்து. 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கென்ய - நியூசிலாந்து ஆட்டம் நைரோபியில் நடைபெறுமா என்பது சந்தேகமே.


ஹராரேயில் சிம்பாப்வே விளையாட்டுத்துறை அமைச்சர் அனீஸ் சிக்வெதரா, ஐ.சி.சி.யின் பணிப்பாளர் மல்கம் ஸ்பீட்டை சந்திக்கிறார்.

இதற்கிடையில், இங்கிலாந்து அணி வீரர்கள் சிம்பாப்பேயில் இருந்து ஆட்டத்தை மாற்றும்படி கேட்க, இதனைப் பற்றிக் கொண்டு "நாங்களும் யோசிக்கத்தான் வேண்டும்" என்கிறார் அடம் கில்கிரிஸ்ட். இப்பொழுது திரும்பவும் கென்யா மற்றும் சிம்பாப்பேயில் நடைபெறும் போட்டிகள் தொங்கு பறி நிலைக்கு மாறிக்கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே நடப்பதென்ன. திமிரா, மிதப்பா? கென்யப் பொலிஸ் துறையினர் இந்த அச்சமெல்லாம் உண்மைக்குப் புறம்பானது என்கிறார்கள்.

கென்யப் பொலிஸ்துறை சார்பாகக் கருத்துக்கூறிய கிங்கோரி முவாங்கி இந்த நிலையில் உண்மையான மிகைப்படுத்தலை, திமிர்த்தனத்தை மிக அழகாகக் கூறுகிறார். "ஆபிரிக்க நாடுகள் என்றால், ஆபிரிக்கர்கள் மத்திய கோட்டுக் காடுகளில் வாழும் குரங்குகள் என்று நினைக்கிறார்கள்போல் இருக்கின்றது" என்று விசனப்பட்டுக் கூறுகின்றார். அவரது வேதனையையும் ஆதங்கத்தையும் நாங்கள் உணர்வுபூர்வமாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறதல்லவா! ✶


**- நிர்மலன்.**




# மத்தியஸ்தர்கள் மயக்கமா? கலக்கமா?

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் திருவிழா இன்னும் சில நாட்களில் தொடங்கவிருக்கின்றது. ரசிகர்கள் யாவரும் அணிகளை மட்டுந்தான் ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த காலத்தில் நடைபெற்று முடிந்த பரபரப்பான போட்டிகள் சிலவற்றை நோக்கினோம் என்றால் எந்தளவுக்கு அந்தப் போட்டிகளினுடைய வெற்றி, தோல்வியில் மத்தியஸ்தர்களுடைய செல்வாக்கிருந்தது என்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம். இதன் காரணமாக, சர்வதேச கிரிக்கெட் மத்தியஸ்தர் சபை பல குற்றச்சாட்டுகளையும் உளரீதியான பாதிப்புக்களையும் மனதில் சுமந்தது. இப்படியான குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர்களை விடுவிக்கும் நோக்கோடு - கடந்த வருடம் கொண்டுவரப்பட்டது கணினி மத்தியஸ்தர் முறை. இந்த முறை மூலம் மத்தியஸ்தர்களை ஓரளவேனும் பாதுகாக்கலாம் எனச் சபை தீர்மானித்தது.

ஆனால், மத்தியஸ்தர்கள் சிலருடைய பிழையான தீர்ப்பும் அதனைக் கணினி மூலம் கண்டு ஆராய்கின்ற வர்ணனையாளர்களின் திறமையும் கிரிக்கெட் வீரர்களினதும், ரசிகர்களினதும் சொல்ல முடியாத எதிர்ப்பலைகளை மத்தியஸ்தர்கள் சம்பாதிக்க நேர்ந்தது என்றே கூறலாம். இதன்காரணமாகச் சில மத்தியஸ்தர்கள் ஓய்வுகூடப் பெற்றிருக்கிறார்கள். இலங்கையைச் சேர்ந்த மத்தியஸ்தர்கள் K.T.பிரான்சிஸ், P.C.கூரே ஆகியோர் தொடர்ச்சியாகச் சில போட்டிகளில் விட்ட



அலங்காரத்தில் நாட்டமுள்ள பக்னர்.

தவறுகளும் அதனை வர்ணனையாளர்கள் அக்குவேறு ஆணிவேறு என ஆராய்ந்ததும் மிகவும் கவலை தரக்கூடிய ஒரு விடயம். இந்த இரு மத்தியஸ்தர்களும் இப்போது சபையில் இல்லை. ஓய்வு பெற்றுவிட்டார்கள். ஒருமுறை K.T. அவர்கள் ஒரு பேட்டியில் கூறினார்கள், "நான் தவறு விடக்காரணம் வீரர்களின் பலமான முறையிடல்கள்தான்" என்று. எது எப்படியிருப்பினும் - ஒரு மத்தியஸ்தர் ஆடுகளத்தில் நிற்கும்போது மனதை ஒருநிலைப்படுத்திய உற்று நோக்கல் மிகவும் அவசியம். மத்தியஸ்தர் ஒருவருக்கு அதிகூடிய உற்றுநோக்கல் முடிவுக்குரியது, L.B.W. ஆட்டமிழப்பு ஆகும்.

ஆனால், சில மத்தியஸ்தர்கள் விக்கட் காப்பாளரின் பிடிமுறையில் குழம்புவது மிகவும் வேதனைக்குரிய விடயம். இரண்டு அணிகளும் வெற்றிக்காகப் போராடும்போது மத்தியஸ்தர் ஒருவரின் முடிவு, அணி வீரர்களைச் சோர்வுக்குள்ளாக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

இம்முறை உலகக் கோப்பைப் போட்டிகளுக்கான மத்தியஸ்தர்கள் பெரும்பாலும் தெரியப்பட்டுவிட்டார்கள். இவர்களைப் பற்றிச் சற்று நோக்குவோம்.

முதலாவதாக, இந்திய நாட்டைச் சேர்ந்த மத்தியஸ்தர் ஸ்ரீநிவாஸ் வெங்கட்ராகவனை எடுத்துக்கொள்வோம். இவர் ஒரு நல்ல அனுபவம் நிறைந்த மத்தியஸ்தர். ஆனால் தொடர்ச்


வெங்கட்ராமன் (தொப்பியுடன்) - தரமான முடிவுகளைத் தருவாரா...?

சியான புகைப்பிடிக்கும் பழக்கமுடைய இவரால், தொடர்ச்சியாக மைதானத்தில் நின்று முடிவுகளை எடுப்பது மிகவும் கடினமாக இருக்கும் என்றே நினைக்கத் தோன்றுகின்றது. ஆனால், மிகவும் நாகரிகமான மத்தியஸ்தர்களில் இவரும் ஒருவர். K.T., P.C. ஆகியோரின் ஓய்வு ஒருவருக்கு ஜக்பொட் பரிசு. அவர் யாரெனில் இலங்கையைச் சேர்ந்த அசோக டி சில்வா. இவருடைய மத்தியஸ்தர் அனுபவம் மிகவும் போதாது. கடந்த கிரிக்கெட் போட்டிகள் சிலவற்றைப் பார்த்தால், அசோக டி சில்வா கொடுத்த பிழையான முடிவுகளால் போட்டிகள் சிலவற்றின் வெற்றி தோல்விகள் மாறின. ஒரு பிரபல முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் கூறினார், அசோக டி சில்வா - தான் விளையாடியபோது பந்து வீசி எடுக்காத விக்கட்டுக்களை எல்லாம் மத்தியஸ்தம் வகிக்கும்போது எடுக்கின்றார் என்று, இம்முறை உலகக் கிண்ண திருவிழாவில் அசோகவின் தடம்புரளல்களும் இருக்கும் என்று நம்பலாம்.

அடுத்தபடியாக, சர்வதேச மத்தியஸ்தர் சபையின் மேக்கப் மத்தியஸ்தர் என வர்ணிக்கப்படுகின்ற ஸ்ரீவ் பக்னர். இவர் மேற்கிந்தியதீவுகளைச் சேர்ந்த ஒரு அனுபவம்மிக்க மத்தியஸ்தர். ஆனால் பகல்/இரவுப் போட்டிகளில் இவருடைய முடிவுகளில் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிகிறது. இரவு ஆட்டங்களில் போடப்படும் கண்ணைப் பறிக்கும் வெளிச்சம் இவருக்கு அவ்வளவாக ஒத்துக்கொள்வதில்லை.


ஷெப்பர்ட், இவர் இங்கிலாந்தைச் சேர்ந்த மூத்த மத்தியஸ்தர். இவருடைய பலம் மைதானத்திலுள்ள வீரர்களைப் பயப்படுத்துவது. பலவீனம் - வயது.

தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்த டரல் ஹாப்பர் பெரும்பாலும் சிறந்த முடிவுகளைக் கொடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஓர்ச்சாட் சில தவறுகளை விட்டிருந்தாலும், கடந்த உலகக் கோப்பைப் போட்டிகளில் பெற்ற அனுபவம் அவருக்குக் கைகொடுக்கும் என நம்பலாம்.

இம்முறை மத்தியஸ்தர் தெரிவில் நடந்த குளறுபடிகளில் உச்சக்கட்டம் சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த டிப்பின் தெரிவு செய்யப்பட்டது. அனுபவமற்ற நடுவர் போல் செயற்படும் இவரை சபை ஏன் தெரிவு செய்தது? போட்டி முடிவுகளைக் குழப்பவா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பொறுமையான மத்தியஸ்தர் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த ஸ்ரீவ்டன். இவருடைய முடிவுகள் பெரும்பாலும் அவ்வளவாகப் போட்டிகளைப் பாதிப்பதில்லை.




அசோக டி சில்வா சரியாகச் செய்வாரா...?

ஆட்டத்தின் நாயகர்கள் என்று சிலர் பார்க்கப்படுகிறார்கள், பரிசு வழங்கப்படுகின்றது. ஆனால், மத்தியஸ்தர்களுடைய பிழைகள் அவ்வளவாகக் கருத்திற்கொள்ளப் படுவதில்லை. ஒருபோட்டிக்கு இரண்டு மைதான மத்தியஸ்தர்களும், ஒரு தொலைக்காட்சி மத்தியஸ்தருமாக மூன்று மத்தியஸ்தர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

ஆனாலும் - போட்டிகள் எவ்வளவு தூரம் இவர்களுடைய முடிவுகளால் பாதிப்படைகின்றது என்பதனை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எது எப்படியிருப்பினும் மத்தியஸ்தர்கள் திருந்தவேண்டும். அதனைச் சர்வதேச கிரிக்கெட் சபையும் செய்யவேண்டும். ●

**- பஞ்சநாதன் சுதர்சன்.**



நன்றி: அருண்

### வலதுகைத் துடுப்பாட்ட வீரரின் நோக்கில் களத்தடுப்பு நிலைகள் (Field Positions)

கிரிக்கெட் வர்ணனைகள் அநேகமாக ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன. ரசிகர்கள் புரிதலில் கூடிய தெளிவு பெறும்முகமாக இப்படம் வெளிவருகின்றது. இனிவரும் காலங்களில் பந்து செல்லும் திசைகள், வீரர்களின் நிலைகள் என்பவற்றை இலகுபடுத்த உதவுவதே நோக்கம். இப்ப சந்தோஷந்தானே?


பூவா, தலையா பார்க்கமுன் பவுண்டரி எல்லைகள், மத்தியஸ்தர் மற்றும் இரு அணித் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். எல்லைக்கோடு வெள்ளையால் அடையாளப்படுத்தலாம். கயிறு வேறு அடையாளமாகப் பயன்படுத்தப்படலாம்.

இடைக்கிடை கொடிகள் நடப்பட்டால் இடைவெளி கற்பனைக் கோடாக ஏற்றுக்கொள்ளப்படும்.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# ஈராக் மீதான போருக்குப் பிந்திய அரசியல் உலகத்தில் மாறுதல்களை ஏற்படுத்துமா?


ஈராக்கிலிருந்து எடுத்துவரப்படும் ஆயுதப் பரிசோதனை அறிக்கை.


ரஷ்யா - சீனா கூட்டு - ஒரு புதிய சகாப்தம்

(நேற்றைய தொடர்ச்சி)

இதனால் யுரோலாந்தில் ஜேர்மனியும், பிரான்சும் தனிமைப்பட்டு விடும் என்பதுடன், யுரோலாந்தும் அமெரிக்காவின் பிரதான சவாலும் தகர்ந்துவிடும் என்பதும் தற்போதைக்கு அமெரிக்கா பக்கம் எடுகோளாக உள்ளது.

இன்னோர் நிகழ்வும் மாறுதலாக அமைவது அமெரிக்காவுக்கு இலாபமாக அமையுமென அதன் ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர். ஈராக்கில் குவிந்திருக்கும் எண்ணெய் வளத்தினைக் கருத்தில்கொண்டு அமெரிக்கா செயற்பட்டாலும் முழு வளைகுடாப் பகுதியிலும் எண்ணெய்க்கான நிர்ணயத்தினைத் தீர்மானிப்பதுடன் ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாக விளங்கும் ஈராக்கினையோ அல்லது சதாம ஹுசைனோ உடைத்து விட்டால் - எண்ணெய் விலை நிர்ணயத்தையும் அதன் அளவீட்டையும் தான் தீர்மானிக்கலாம் என அமெரிக்கா நம்புகின்றது. மேலும், ஐரோப்பாவில் அமெரிக்காவு... ஒப்பீடு செய்யுமளவுக்குப் பெரியளவில் எண்ணெய் வளம இல்லாமையும், வளைகுடா நாடுகளிலேயே அவை முழுக்கத் தங்கியிருக்கும் போக்கும் அமெரிக்காவுக்கு இலாபகரமானதாக அமையும்.

போரில் அமெரிக்கா எல்லாத் தடைகளையும் தாண்டி வெற்றியை அடையுமாயின் ஏற்படவுள்ள அரசியல் மாறுதல்களைச் சற்று விரிவாக நோக்குவோம்.

அமெரிக்கா மீண்டுமொரு பெரும் சக்தியாக உலகத்தின் முன்பு காட்டப்படும். அமெரிக்கா உலகத்தினை நேரடியாக நிர்வகிக்கும், கட்டுப்படுத்தும், தடைகளையும் நெருக்கடிகளையும் தமது எதிரிகள் மீது திணிக்கும். உடனடி எதிரிகளாகத் தென்படும் வடகொரியர் ஆபத்துமிக்க விளைவுகளை அனுபவிக்கநேரிடும்.

ஈரான் மிக முக்கிய பிரச்சினையின் மையமாக மாற்றமடையும். ஈராக்கையும், சதாமையும் தோற்கடிக்க உதவும் இஸ்லாமிய சக்திகள், போரிறகுப் பின்பு ஏற்படப்போகும் விளைவுகளைக் கண்டு துயரப்படவேண்டியநிலை ஏற்படும். சதாம் தோல்வி கண்ட பின்பு, முகமட் கதாமி மிகப் பெரும் அரசியல் தலைவராக விளங்குவார்.

ஏற்கனவே அமெரிக்க எதிர்ப்பைக் கொண்டுள்ள ஈரான் மீண்டுமொரு நெருக்கடியை எதிர்கொள்ளும். இந்தியாவுக்கு வருகை தந்தமையும், குடியரசு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டமையும், இந்தியாவுடன் அவர் செய்து கொண்ட பல உடன்பாடுகள் ஈராக் போருக்குப் பின்பு எப்படியான அரசியலை ஆற்ற வேண்டும் என்பதை குறிப்பதாகவே அமைந்துள்ளது.

இந்தியாவுடன் மட்டுமல்ல கதாமி சீனாவுடனும், ரஷ்யாவுடனும் நெருக்கமான நட்பைப் பேண விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்குக்கு அடுத்த நிலையில் பலமான மேற்காசிய அரசு ஈரான் என்பதும், அதன் மக்கள் ஏற்கனவே அமெரிக்க எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்கள் என்ற வகையிலுமே அதன் முக்கியத்துவம் வேறுபட்டதாக அமையக் காரணமாகவுள்ளது.

இந்தியாவுக்கு வருகை தந்த கதாமியை - வாஜ்பாய் அரசாங்கம் பாகிஸ்தானுக்கு எதிரான அரசியலை, இஸ்லாமியருக்கு எதிரான அரசியல் அல்ல என்பதை நிறுவ முயன்றதை உணரமுடிந்தாலும், வாஜ்பாய் ஈராக்குக்கு எதிரான போரை விரும்பாமையைப் பல தடவை வெளிப்படுத்தியிருந்தது கவனத்துக்குரியது.

இது கதாமியின் உணர்வுகளை வாஜ்பாய் பிரதிபலித்ததாகவே அமைந்திருந்தது. பரஸ்பரம் இருவரும் தமது உணர்வுகளைக் குடியரசு தினத்தில் வெளிப்படுத்தியிருந்தமையை உணர முடிகின்றது.

அடுத்த நிலையில், ஈராக் போர் முழு உலகத்திலும் அமெரிக்காவின் விருப்பத்தினை அடைவதற்கான வழியாக அமையும் தன்மையைக் கொண்டது. அரசுகளது இறைமை ஏற்கனவே கேள்விக்குள்ளாகியிருக்கும் நிலைமை மேலும் அதிகரிக்கும். பிராந்திய சக்திகளுக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதுடன் சீனா, இந்தியா, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற தனித்துவமான அரசுகளின் எதிர்காலம் அந்தந்த அரசுகளுக்குப் பாதகமானதாக அமையும் அல்லது அவற்றுக்கு நெருக்கடிகள் அதிகரிக்கும். குறிப்பாக, சீனாவைத்தவிர ஏனைய அரசுகளின் அரசியல், பொருளாதார நலன்களுக்கு நெருக்கடிகள் அதிகரிக்கும்.

ஏனெனில், சீனாவை அதிகம் நெருங்கவோ, நெருக்கடியைக் கொடுக்கவோ அமெரிக்காவால் முடியாத சூழல் ஒன்றை சீனா வளர்த்துள்ளது. மாறாக, மறைமுகமாகச் சீனாவின் நண்பர்களைத் தோற்கடிப்பதில் அமெரிக்கா முனைப்புப்பெற வாய்ப்பு அதிகமுண்டு. ஆனால், ஈராக்கும் சீனாவின் நட்பு நாடு வடகொரியாவும் அவ்வாறான நெருக்கமுடைய நாடுகள் தான்.

அதேநேரம், வடகொரியா - சீனாவின் நேரடிப்பிராந்தியம் என்ற வகையில் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு ஆபத்தானதாக அமெரிக்கர்களுக்கும் அமையலாம். ஈராக்கையும்விட, வடகொரியா அமெரிக்காவுக்குக் கடினமான பணியாக அமையக்கூடிய வாய்ப்புக்களே அதிகமுண்டு.

அடுத்த நிலையில் மேற்காசியாவில் தற்போது நிலவும் பாலஸ்தீனர்களினதும் - இஸ்ரேலியர்களினதும் சர்ச்சை மேலும் தீவிரமடைய வாய்ப்புண்டு. இஸ்ரேலியருக்கு உதவும் அமெரிக்காவின் வெற்றி பாலஸ்தீன அரசையோ, மக்களையோ மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும்.

இஸ்ரேலியர் விரும்புகின்ற தீர்வுகளைத் திணிக்கும் நிலைமை அதிகரிக்கும். ஏரியல் ஷரோனின் ஆட்சிக் காலம் முழுவதும் தற்கொலைத் தாக்குதல்களாலும், படுகொலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட காலமாகக் கடந்தகாலம் மட்டுமல்ல, இனிவரும் காலமும் விளங்கும். தவிர்க்க முடியாமல் ஒரு புதிய போரியல் முறைமைக்கு அமெரிக்க - இஸ்ரேலிய அரசுகள் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட வாய்ப்பு உண்டு.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் என்றவகையிலும் அதன் அனுபவங்கள் ஏனைய நாடுகளின் விடுதலைப்போராட்ட அமைப்புக்கள் மீது பகிரப்படும் என்ற வாதம் காணப்பட்டாலும், பிராந்தியத்திற்குப் பிராந்தியம் அமெரிக்கக்கொள்கை வேறுபட்டதாக அமையும்.

ஆனால், அமெரிக்க வெற்றியைப் பயன்படுத்தி சில அரசுகள் தமது நாடுகளிலுள்ள போராட்ட அமைப்புக்கள் மீதான கணிப்பினைச் சாத்தியப்படுத்த முனையலாம். அதற்கான சமநிலைப்பலம் எப்படி அமைகின்றதோ அதனைப் பொறுத்ததாகவே தீர்வுகளும் திணிப்புக்களும் சாத்தியப்படும எனக்கருதமுடியும்.

உலக மயப்படுத்தல் எனப் போதிக்கப்பட்டுவந்த விடயம், போரின் வெற்றிக்குப் பிந்தியகாலத்தில் அமெரிக்க மயப்படுத்தலாகவே அமையும். இதுவரையும் அப்படியான முயற்சி 1989-1999கள் வரை அவ்வாறு தான் காணப்பட்டபோதும், 1999 இற்குப் பிந்திய காலப்பகுதியில் அதன் மாறுதல் உலகத்தில் பல நாடுகளது தொழில்நுட்ப, பொருளாதாரப் பலத்தைப் பொறுத்து அமைந்து வந்ததுடன், உலகமயப்படுத்தல் வேகம் தணிந்ததுபோல் காட்டப்பட்டது. ஆனால, பிராந்திய அரசுகளின் மயப்படுத்தல் பொருளாதாரத் தளத்தில் வலுவடைந்திருந்தது. குறிப்பாக, இலங்கையில் இந்தியாவின் பொருளகள் குவிந்திருப்பதையும், இலங்கையின் சிறு கைததொழில் தயாரிப்புக்கள் அனைத்தும் பாதிப்படைந்திருப்பதையும் சுட்டிக்காட்டமுடியும். எனவே, பிராந்திய மயப்படுத்தலும் அதுசார்ந்த ஆக்கிரமிப்பும் படிப்படியாக தகர்ந்து அமெரிக்க மயப்படுத்தல் மீண்டும் தூக்கலாக மாறும் சூழல் உண்டு எனக்கூறலாம்.

அடுத்ததாக, அமெரிக்கா - பொருளாதாரம் நெருக்கடியிலிருந்து மீளும வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மேற்காசியாவின் வளத்தினைத் தனது விருப்புக்குட்பட்டதாக நிர்ணயிக்கும் பலம் சாத்தியப்படும்போதும், அதுசார்ந்த அரசியல் பொருளாதாரத்தளம் வேகமாக அமெரிக்காவிற்குக் கிடைக்கும. அதனை மையப்படுத்தி புதிய எழுச்சியைப் பொருளாதார விருத்தியிலும் இராணுவ அரசியல் விருத்தியிலும், சாதகமானதாக அமெரிக்கா மாற்றிக் கொள்ளும்.

எனவே, ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் போரில் அமெரிக்கா வெற்றிபெறுமாயின் மேற்குறிப்பிட்ட மாறுதல்கள் ஏற்படுமென கருத அதிக வாய்ப்புகள் தென்படுகின்றன.

அவ்வாறான சூழல் ஏற்படத் தவறுமாயின் அமெரிக்காவின் உலக அதிகாரம் தகர்ந்து போய்விடவும், அதன்பின்னர் அதிக நெருக்கடியை அமெரிக்கா சந்திக்கவேண்டியேற்படும் என்ற அச்சமும் அமெரிக்க நலன்விரும்பிகளிடம் உண்டு.

அமெரிக்காவின் மிக நீண்டகால பாதுகாப்பு விவாகர வெளிவிவகார ஆலோசகரான ஹென்றி கீஸிங்கர் அத்தகைய கருத்தினையே கொண்டிருப்பதுடன்,

அமெரிக்காவின் சாம்ராஜ்யக் கனவும் தகர்ந்துபோய்விடுமெனவும் அஞ்சுவதான அபிப்பிராயம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

கே.ரீ.கணேசலிங்கம்

# பொதுத்தேர்தலில் 35 வேட்பாளர்கள்; பொ.ஐ.முவிடம் பேரம் பேசும் ஜே.வி.பி!

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடுவதாயின் 35 வேட்பாளர்களை நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கித் தரவேண்டும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் இந்தக் கோரிக்கைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி இதுவரை எந்தப் பதிலையும் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டணி அமைக்கப்படுவதில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு விருப்பமில்லை எனவும் கூறப்படுகிறது.

அதேவேளை, அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர ஆகியோர் ஜே.வி.பியுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர். ஜே.வி.பியினர் மகிந்த ராஜபக்ச மீது குற்றச்சாட்டுக்களைக் கிளப்பி வருகின்றனர்.

அண்மையில் அனுராதபுரத்தில் பேசிய விமல் வீரவன்ச, மகிந்த போன்றவர்கள் எதையும் செய்யத் தெரியாதவர்கள் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளை நம்பமுடியாது என்கின்றார் அனுரா

விடுதலைப் புலிகள் இயக்கம், ஒருபோதும் நம்பிக்கை வைக்கமுடியாத அமைப்பு என நாடாளுமன்றில் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார். ஒஸ்லோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ஆற்றிய உரை சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுவரும் விவாதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள் நடந்துகொள்ளும் முறைகள் இதனை தெளிவுபடுத்துகின்றது. அந்த இயக்கம் சிறுவர்கள் படைகளில் சேர்க்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுகிறது. அதனை அரசாங்கம் தடுக்கவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல்களை ஜனாதிபதி அனைத்துத் தருணங்களிலும் பொறுத்துக் கொண்டிருப்பார் என்று எதிர்பார்க்கமுடியாது என்றார்.

# ஓய்வுபெற்ற தமிழ் பொலிஸார் மீண்டும் சேர்க்க நடவடிக்கை!

## உள்துறை அமைச்சர் கூறுகிறார்

தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைவது மிகவும் குறைவாக உள்ளது. இதனால் ஓய்வு பெற்ற தமிழ்ப் பொலிசாரை பொலிஸ் சேவைக்கு இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பெ.இராதா கிருஷ்ணன், நாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸாரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியதை அடுத்தே, உள்துறை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# சாவகச்சேரியில் மீண்டும் மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரியில் மீண்டும் மாவட்ட நீதிமன்றம் நாளை திங்கள் முதல் இயங்க ஆரம்பிக்கவுள்ளது.

கடந்த இரண்டாயிரமாம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் பின் சாவகச்சேரியில் நீதிமன்றம் இயங்குவது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இம்மாவட்ட நீதிமன்றத்திற்கு புதிய நீதிபதியாக கே. அரியநாயகம் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அஷ்ரப் மரணமானதற்கு எழுபது லட்சம் நட்டஈடு!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் விபத்தில் இறந்ததனால் அவரின் குடும்பத்துக்கு 70 லட்சம் ரூபா நட்டஈடாக வழங்க அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த ஆலோசனைக்கிணங்கவே, அமைச்சரவை இந் நிதியை அங்கீகரித்துள்ளது.

இந்த நட்டஈட்டில் பேரியல் அஷ்ரப்புக்கு 50 லட்சமும், மகளுக்கு 20 லட்சமும், தாய்க்கு 10 லட்சமும் வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்த தீர்மானத்துக்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அஷரப்போடு ஹெலியில் பயணம் செய்தவர்களுக்கும் இந்த நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

*சிந்தனைக்கு*
*தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார்.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## தளிர்கள் துளிர்த்துவர...

விடுதலைப் புலிகள் சிறார்களைச் சேர்ப்பதாக கடந்த சில வாரங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் விஷமத்தனமான, பொய்ப் பிரசாரத்தை நேரில் கண்டறிந்து, உண்மையைத் தெரியும்வண்ணமாக - ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெலாமியின் விஜயம் அமைந்திருக்கிறது.

அமைதிப் பேச்சுக்கள் - உயர் பாதுகாப்பு வலய நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கையில், விடுதலைப் புலிகள் மீது உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி - நிலைமையினை இன்னமும் குழப்பத்திற்காளாக்கும் நோக்குடன் - அமைதிக்கெதிரான சக்திகளால் முன்னெடுக்கப்பட்டுவந்த பிரசாரம் தீவிரமாக்கப்பட்டு வந்த கட்டத்தில், யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளரின் விஜயமும், அவர் விடுதலைப் புலிகளுடன் நடாத்திய சந்திப்பும் - இத்தகைய பிரசாரங்களுக்கு ஆப்பு வைத்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் போர் நடவடிக்கைகளில் சிறார்களை ஈடுபடுத்துவதான விடயம் தொடர்பாக - அவர்கள் சர்வதேச இணக்கத்துக்கு அமைய நடந்துகொள்வதில் உறுதியாக இருப்பதாகவும், அவர்கள்மீது தனக்கு நம்பிக்கையிருப்பதாகவும் தெரிவித்ததன் மூலம் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதல் எதிர்க்கட்சியினர் பலரும் வெளியிட்டிருந்த எழுந்தமானமான கருத்துக்களுக்கு கட்டாய ஓய்வளிக்கப்பட்டிருக்கிறது.

போரினால் பாதிப்புக்குள்ளாகும் சிறார்கள் பற்றிய யதார்த்தத்தை உணர்ந்தவராக யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளருடைய பேச்சுக்களும் அமைந்துள்ளன.

இந்தவகையில் - நீண்டகால யுத்தத்தால் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் எழுவதை களநிலை உணர்ந்தவராக அவர் பேசியிருக்கிறார்.

அதேவேளை - விரைவில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து சிறுவர் பராமரிப்பு மற்றும் நலன் பேணும் நடவடிக்கைகளில் இறங்கவிருப்பதாக அவர் அறிவித்திருப்பது, மிக முக்கியமான விடயமாக அமைகிறது.

இதுவரைகாலமும் - வடக்கு, கிழக்கில் நடைபெற்று வந்த இராணுவத் தாக்குதல்களாலும், அரசாங்கத்தின் இன ஒடுக்குமுறைகளாலும் - சிறார்கள் மிகக் கொடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

போர்க் களங்களுக்கு அப்பால் மக்களது குடிமனைகள் குறிவைத்துத் தாக்கப்பட்டதால் கொல்லப்பட்ட சிறார்களும், அங்கவீனமடைந்து - தம் எதிர்காலமே கேள்விக்குறியான பிஞ்சுகளும், ஏராளமான உளவியல் தாக்கங்களால் அவர்கள் நெருக்குவாரங்களுக்கும், மன வடுக்களுக்கும் உள்ளாகயிருப்பதும் எம் தேசத்தின் ஆறாத ரணங்களாகும்.

பாடசாலைகளிலும், பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போதும், பள்ளிக்குச் செல்லும்போதும் - ஏதுமறியாத இளம்பூக்கள் - கண்மூடித்தனமான, மிலேச்சத்தனமான விமானக் குண்டுவீச்சுக்களாலும், எறிகணைத் தாக்குதல்களாலும் - குருதிக் கடலில் வீழ்ந்து கிடந்ததை எவரும் மறந்துவிடமுடியாது.

இந்தத் தாக்குதல்களை நேரடியாகப் பார்த்ததாலும், குண்டுவீச்சுக்கள் - ஷெல் சத்தங்களாலும், அன்றாடம் உருவாகிய உயிர்ப் போராட்டங்களாலும் - உள்மனச் சிதைவுகளுக்கு ஆளாகி, அமைதியிழந்த சிறார்கள் இன்றும் எம்மண்ணில் வாழ்ந்து வருகின்றனர்.

கண்முன்னே தாயை, தந்தையை பறிகொடுத்த சிறார்கள், உறவுகள் இழந்து - யாருமற்ற அநாதைகளென கண்ணீரும் விரக்தியுமாக வாழும் எம் மழலைகள் என எம் சமுதாயம் கண்ட துயரம் பெரிது.

இது ஒருபுறந்தானிருக்க - பாடசாலைகள் சிதைத்தழிக்கப்பட்டதாலும், இராணுவத் தாக்குதல்களால் ஊருராய் அலைக்கழிந்து - இடம்பெயர்வே வாழ்வாகிப் போனதாலும், தமிழர் பிரதேசம் என்பதற்காக அப்பியாசக் கொப்பிகளும் - பென்சில்களும்கூட தடைசெய்யப்பட்ட 'பொருளாதாரத் தடை'களாலும் - கல்வி கற்கும் அடிப்படை உரிமையைக்கூட எம் சிறார்கள் இழந்தனர்.

ஒருவேளை உணவுக்கே அல்லற்பட்டு, அதுகூட உறுதியாகக் கிடைக்குமா என ஏங்கித் தவித்த மொட்டுக்களும் இந்த மண்ணிலே உள்ளனர்.

அடிப்படைச் சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகளுக்கும் தடையாகி, தட்டுப்பாடாகிப் போனதால் - நோய்களால் வாடி, கருகிப்போன பூக்களின் இடுகாடுகள் இன்னமும் இங்கிருந்து மறைந்துவிடவில்லை.

இவ்வளவு கொடுமைகளை எமது சிறார்கள் மீது அழுத்திவிட்டு - அவற்றையெல்லாம் மறைத்து - 'சிறார் ஆட்சேர்ப்பு' என 'மனிதாபிமானக் கதை' பேசியவர்களுக்கு - எமது சிறார்களுக்கு கல்வியும் அடிப்படை வசதிகளும் பெற்றுத் தாருங்கள் என விடுதலைப் புலிகள் கோரிநின்றதும்,

- யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளர் அதனை ஏற்று, கூட்டுச் செயற்திட்டங்களை ஆரம்பிக்கத் தீர்மானித்திருப்பதும் - உண்மையை உலகம் உணர்ந்திருப்பதை உரத்துச்சொல்லியிருக்கிறது.

இந்தவகையில் - போர் தணிந்த இனிவரும் காலத்தில் - எமது சிறாரின் நல்வாழ்வும் முன்னேற்றமும் செழிக்கவும் உதவவரும் உள்ளங்களினை, மனிதநேயமிக்க நிறுவனங்களை வரவேற்போம்! வாழ்த்துவோம்!!

# இரண்டு லட்சம் குடும்பங்களை மீளக் குடியமர்த்த அங்கீகாரம்

## அமைச்சரவை வழங்கியது

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த இரண்டு லட்சம் குடும்பங்களை மீளக்குடியமர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்தோரில் 42 ஆயிரம் பேர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். ஏனையோர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர்.

மீளக்குடியமரும் மக்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுக்குப் பணித்துள்ளார்.

மீளக்குடியமர்த்தப்பட வேண்டிய 5 லட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்குப் போதிய வசதிகளை செய்துகொடுப்பதற்குப் பணவசதி அரசாங்கத்திடம் இருப்பதாகவும், இதுவரை 70 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

# முஸ்லிம்களுக்குத் தலைமை தாங்க அமைச்சர் ஹக்கீமுக்குத் தகுதியில்லை

## அதாவுல்லா அறிவிப்பு

அமைச்சர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் மக்களுக்குத் தலைமை தாங்க ஏற்றவரல்ல. முஸ்லிம்களின் சார்பாகச் சமாதானப் பேச்சு வார்த்தை[illegible]ளில் பங்குபற்றுவதற்கான நம்பிக்கையை அவர் பெறவில்லை என்று பிளவுபட்ட முஸலிம் காங்கிரஸ் அணியைச் சேர்ந்த அதாவுல்லா தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமஷ்டி பற்றி இப்போது பேசப்படுகிறது. இது பிரயோசனமற்றதொன்று. சமஷ்டி அரசியல் யாப்பைப் பிரகடனம் செய்வதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெறவேண்டும்.

இதை கொண்டிருக்காமல் சமஷ்டி பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. போர் நிறுத்தம் முறியுமானால், கிழக்கிலுள்ள முஸ்லிம்களே அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் படித்த 60 பொலிஸார் வட - கிழக்கில் பணிக்கு!

பொலிஸாருக்கு விசேட தமிழ் மொழிப்பாட போதனைகள் இடம்பெற்று வருகின்றன. தேசிய மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுவரும் தமிழ் மொழிப் போதனைகள் மூன்று மாதங்கள் நடத்தப்படுகின்றன.

முதற்கட்டமாக 60 பொலிஸார் பயிற்சிகளை முடித்துள்ளனர். இவர்கள் வட - கிழக்குப் பகுதிகளில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

தமிழ் மொழிப் பாட போதனையை முடித்த பொலிஸாருக்கு வட - கிழக்கில் விரும்பிய இடங்களில் பணியாற்ற அனுமதி வழங்கப்படும் எனப் பொலிஸ் மா அதிபர் ஏ.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சிகளுக்கு பேச்சுக்கள் பற்றி விளக்கமளிக்க அமைச்சர்கள் மிலிந்த, பீரிஸ்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எதிர்க்கட்சிக்கு விளக்கம் அளிப்பதற்கு இருவர் நியமிக்கபட்டுள்ளதாகப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகிய இருவருமே எதிர்க்கட்சியினருக்கு விளக்கமளிப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சர்களாவர்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் - ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான தகவல்களை எதிர்கட்சியினருக்கு உடனுக்குடன் விரிவாகத் தெரிவிக்கப்படும் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள்; விசேட பயிற்சித்திட்டக் கருத்தரங்கு

மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான விசேட பயிற்சித்திட்டக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு, வெளிநாடுகளில் மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான கல்வியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற கல்விமான்களாலும், பயிற்றப்பட்ட உள்ளூர் நிபுணர் களாலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் பெற்றோர்களுக்கு இன்று நடைமுறையிலுள்ள மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான நவீன பயிற்சிகள் பற்றி விளக்கமளிக்கப்படுவதுடன், தொடர்ந்து நடைபெறும் கலந்துரையாடலின்போது, பிள்ளைகளின் குறைகள் சம்பந்தமான கேள்விகளுக்குத் தனிப்பட்ட விளக்கங்களும் தரப்படும்.

மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் நிபுணர்களால் தனித்தனியாகப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அவர்களின் குறைபாடுகள் பற்றியும், அவற்றிற்கான உகந்த பயிற்சிகள் பற்றியும் பெற்றோருக்கு விளக்கமளிக்கப்படும்.

மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான ஒரு பாடசாலையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பது சம்பந்தமான திட்ட விளக்கவுரையும், இது தொடர்பான கருத்துப் பரிமாறல்களும் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுடன் கலந்து கொண்டு, பயனுள்ள பல தகவல்களைப் பெறுமாறு அங்கீகாரம் பெற்ற சமூகநல அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

# பீரிஸ் பேச எழுந்தபோது நாடாளுமன்றில் குழப்பம்

ஒஸ்லோவில் பிரதமர் ஆற்றிய உரை சம்பந்தமாக ஒன்றரை நாட்கள் நாடாளுமன்றில் இடம்பெற்ற உரை தொடர்பாக, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவிக்க முற்பட்டபோது, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் வெளிநடப்புச் செய்தனர். இந்தச் சம்பவத்தின்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அமைச்சர் பீரிஸ் நாடாளுமன்றில் பேசுவதற்கு எழுந்தபோது, ஜே.வி.பி உறுப்பினர் விமல் வீரவன்ச ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பியபோதே சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

நாடாளுமன்றில் ஏற்பட்ட அமளிதுமளியைக் கட்டுப் படுத்த சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா பலமுறை முயற்சித்தபோதும் அது சாத்தியப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் பிரதமர் உரைக்குப்பின் மற்றொருவரின் கருத்து அவசியமில்லை என்ற ஒழுங்குப் பிரச்சினையை விமல் வீரவன்ச முன்வைத்தார். இவ்விடயத்தில் எவ்வித ஒழுங்குப் பிரச்சினை ஒன்றுமில்லை எனக்கூறிய சபாநாயகர், அமைச்சர் ஜி.எல்.பீரிஸை உரையாற்றுமாறு கூறினார். இதன்பின்பே சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

# குற்றச் சாட்டுக்களில் சிக்கியுள்ள லஞ்ச ஊழல் ஆணையாளர்!

## நாடாளுமன்ற விசாரணைக் குழு அமைக்கக் கோரிக்கை

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணையாளருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு விசேட நாடாளுமன்றக் குழுவொன்றை நியமிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தொ[illegible]வித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்த யோசனைக்கு இணங்க, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக ஆராய்ந்தார்கள்.

பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பயமுறுத்தியதாகவும், ஆணைக்குழுவின் இரகசியத் தகவல்களை ஜனாதிபதிக்கு வழங்கியதாகவும் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்த வேண்டுகோளைச் சபாநாயகரிடம் விடுக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நாடாளுமன்றில் அங்கம்வகிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலொரு பங்கினர் கைச்சாத்திட்டு வேண்டுகோள் விடுத்தால் சபாநாயகர் குழுவொன்றை நியமிக்கலாம் என்பது நாடாளுமன்ற விதியாகும்.

# பொதுத் தேர்தலுக்குத் தயாராகி வரும் இருபெரும் தென்னிலங்கைக் கட்சிகள்

இனப்பிரச்சினைத் தீர்வின் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்காகத் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மற்றும்


ரிச்சர்ட் பத்திரன

அரச தரப்பு ஆகிய இரண்டுமே தயாராகிவருகின்றன.

இதற்கு முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் இணங்கிக் கொள்ளப்பட்ட சில விடயங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது, பல்வேறு பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. முக்கியமாக, அதியுயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியேற்றம் மற்றும் பொலிஸ், நீதிப்பிரச்சினைகள் இதில் அடங்குகின்றன.

பரச்சினைகள் எழுகின்றவேளையில அந்தப் பிரச்சினைகளை முறுகலாக வளர்க்காமல், இரண்டு தரப்புமே அடுத்தகட்டச் சமாதானப் பேச்சுவார்த்தையில் அதனைப் பேசிக் கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இது, இரண்டு தரப்புக்கும் இடையில் நிலவுகின்ற புரிந்துணர்வுகளை வலுப்படுத்தும் அம்சங்களாக இருந்து வருகின்றன. இந்தநிலையில் அடுத்த கட்டப் பேர்லின் பேச்சுவார்த்தையில் ஆராய்வதற்குப் பல விடயங்கள் காத்திருக்கின்றன. தென்னிலங்கை அரசியல், வடக்கு-கிழக்கு அரசியலின் தாக்கங்களால் பிரதிபலிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பிரதிபலிப்புகளைக் கொண்டு தென்னிலங்கைக் கட்சிகள் தமது ஆட்சி உறுப்பினர்களை உயர்த்துவதற்கு அல்லது தேர்தல் ஒன்றிற்கு முகங்கொடுப்பதற்கு முயற்சிக்கின்றன.

ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்த வரையில், அந்த முன்னணி சமாதான நகர்வு ஒன்றை முன்னெடுத்துச் செல்கிறது. அதேநேரம், தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அந்த முன்னணி பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தறபோதைய சூழ்நிலையில் இந்த முயற்சிக்குப் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி தீவிரமாக மேற்கொண்டு வந்த போர், அதற்குப் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி நடத்திய போர் என்பனவற்றால் நாட்டின் பொருளாதாரம் பாதிப்புற்றிருக்கிறது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்துவதும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒன்றாக மேற்கொள்ளவேண்டிய அம்சமாகிவிட்டது.

இரண்டும் ஒருவகையில், பொருளாதாரத்தில் இணைப்புப் பண்டங்கள் போன்ற நிலைப்பாட்டைப் பெற்றுவிட்டன. சமாதானத்தைத் தவறவிட்டால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுறும். மறுபுறத்தில், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பாவிட்டால் தமது ஆட்சியின் ஸ்திரத்தன்மை குறைந்துவிடும் என்ற நிலை, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த தேர்தலில் மக்கள் -ரணில் வக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்குத் தமது ஒப்புதலை வழங்கியபோதும், தமது அதிகாரத்தை விட்டுக் கொடுக்க மறுத்த ஜனாதிபதி - ரணில விக்கிரமசிங்கவின் ஆட்சியை வீழ்த்துவதில் குறியாக இருந்து வருகிறார்.

தமக்குச் சர்வ அதிகாரங்கள் இருந்தாலும், ரணிலின் ஆட்சியை முடிவுறுத்துவதில் ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்பு ரீதியில் சிக்கல்கள் இருந்தே வருகின்றன. மறுபுறத்தில் தமது முன்னணிக்குள் நீடித்துவரும் உட்பூசல்கள் ஜனாதிபதியைச் சிந்தித்துச் செயற்படத் தூண்டியுள்ளன.

உலக நாடுகள் இலங்கைக்கு நிதியுதவியளிக்க முன்வந்துள்ளன. எனினும், அந்த உதவிகள் இதுவரை முழுமையாக வந்து சேரவில்லை. சம்பந்தப்பட்ட நிதியுதவிகளைக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தைச் சீரபடுத்த முடியுமென அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களையும் அது வடிவமைத்து வருகிறது.

இந்த நிலையில், நாடு மீண்டும் ஒரு தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு வந்துவிட்டதாக அரசியல் விமர்சகாகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஏற்கனவே இத்தகைய கருத்துக்கள், 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாத ஆரம்பத்தில் இலங்கையில் பேசப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமது ஒரு வருடகாலப் பூர்த்தியை எய்தியபோது, அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி ஏதாவது காரணங்களை முன்வைதது அரசாங்கத்தைக் கலைக்கக்கூடிய அதிகாரம் இருந்தது. எனினும், அவர் அது தமக்குத் தகுந்த தருணம் இல்லை என்ற காரணத்தினால் அத்தகைய முயற்சி எதனையும் ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை.

தற்சமயம் அத்தகைய தருணம் வந்திருப்பதாக ஜனாதிபதி நம்பிக்கை கொண்டிருப்பதால், தேர்தல் ஒன்றுக்கான வாய்ப்புக் குறித்து அதிகமாகப் பேசப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக்கூட்டு இன்னும் முழுமை பெறவில்லை என்றபோதிலும், இந்தக் கூட்டை எப்படியாயினும் அமைத்து, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்பதில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதீத நாட்டம் காட்டிவருகின்றார்.

சம்பந்தப்பட்ட இரண்டு கட்சிகளுக்கும் இடையில் பல விடயங்களில் ஒத்துப்போகும் தன்மை காணப்படுகின்றது. என்றாலும், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒத்திசைவின்மை நிலவுகின்றது. தமது இணக்கப்பாடுகள் தொடர்பில் இரண்டு கட்சிகளும் எதிர்வரும் 6 ஆம் திகதி மீண்டும் சந்திக்கவிருக்கின்றன. இதன்போது எச்சமாக இருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான விடயத்தில் இரண்டு தரப்புக்களும் உடன்பாடு ஒன்றைக் காணமுறபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு இணக்கம் ஒன்று காணப்படாவிட்டாலும், தேர்தல் ஒன்றுக்கான கூட்டையாவது அமைத்து விடலாம் என்ற போக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் காணப்படுகிறது.

ஐ.தே.மு.யில் இணையலாம் என எதிர்பார்க்கப்பட்ட பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்சர்ட் பத்திரன, தற்சமயம் மாற்றுப் போக்கைக் கடைப்பிடிபபதாகத் தகவல் வெளியாகியுள்ளன. முன்னர் தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையலாம் எனச அவர் சிந்தித்தபோது, அந்தக் கட்சி மக்கள் பலத்தை தன்னகத்தே கொண்டிருந்தது. எனினும், தற்சமயம் பொருடகளின் விலையுயர்வு, வேதன உயர்வின்மை போன்ற பல காரணங்களினால் அந்த கட்சிக்கு மக்களின் பலம் குறைந்துள்ளது. இந்தநிலையில் ஐக்கிய தேசியக்கட்சிக்குச் செல்வது உசிதமான முடிவல்ல என ரிச்சர்ட் பத்திரன கருதுகிறார். இதன் அடிப்படையிலேயே கட்சித தகவல்களின் கூட்டத்தில் பங்கு கொள்வதற்கு அநுராவுக்கு இடமளித்துள்ளார். அதே

## தெற்குத் திசையினிலே...
### கொழும்பிலிருந்து இந்திரஜித்

போல் விமர்சனங்களை வெளியிட்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசியும் தற்சமயம் அமைதிகாத்து வருகிறார்.

தருணம் பார்த்துக் காத்திருந்த இவர்கள் ஐக்கிய தேசிய அரசாங்கம் வீழ்ச்சி கண்டுவிடுமோ என்ற அச்சத்தைக் கொண்டிருக்கின்றனர். நாட்டில் சமாதானம் தேவை. அதனை ஜனாதிபதியினால் கொண்டுவர முடியாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே அதற்குப் பொருத்தமானவர் எனக் கூறிவந்த இவர்கள் இருவரும், தற்சமயம் எடுத்துள்ள நிலைப்பாடு தனிப்பட்ட அரசியலின் காய்நகர்த்தலைக் காட்டுகிறது.




நமது ஈழநாடு வழங்கும்



உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: "இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்"

[இரத்தினகோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

32, சிறாம்பியடி ஒழுங்கை,யாழ்ப்பாணம்.

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும் நவீன இயந்திரங்களினால் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000



வழங்குவோர்: சந்திரா மல்ரிகோட்டாட

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!



உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (..................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (..................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (..................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (..................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (..................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------
வயது: ------------------------------
முகவரி: ------------------------------
------------------------------




*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003







### ஹீத் ஹீல்ரன் ஸ்ரீக்

(அணித்தலைவர்)



*பிறந்தது* - 16.03.1974 (புலவாயோ)
*அணிகள்* - மட்டபெல்லாண்ட், ஹம்ப்ஷயர் (இங்.), சிம்பாப்வே.
*சுருக்கமாக*- ஹீத் ஸ்ரீக்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்.
டெஸ்ட் அறிமுகம்- எதிர் பாகிஸ்தான் 93/94.
ஒரு நாள் அறிமுகம்- எதிர் தென்னாபிரிக்கா- 93/94,
சர்வதேச ஒரு நாள் ஆட்டங்கள்- 149, 183 விக்கெட்டுக்கள், திறமை 5-32, டெஸ்ட்- 180 விக்கெட்டுக்கள்.
ஒருநாள் ஆட்டங்கள்- 213, 260 விக்கெட்டுக்கள்.
ஆரம்பப்பந்து வீச்சு வீரர். சிறந்த களத்தடுப்பாளர்களில் ஒருவர்.

### சிரெய்க் பிறைன் விஷாட்




*பிறந்தது* - 9.1.1974 ஹராரே
*அணிகள்* - சிம்பாப்வே, மற்றும் உள்ளூர் பிராந்திய அணிகள்
*சுருக்கமாக* - கிரெய்க் விஷாட்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம* - எதிர் தென்னாபிரிக்கா 95/96
ஒருநாள் அறிமுகம் : எதிர் அவுஸ்திரேலியா 96/97
21 டெஸ்ட்களில்- 760 ஓட்டம். ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 27, 1283 ஓட்டம். ஒரு சதம், 4 அரைச் சதங்கள்.

### ஆர்னல்டஸ் மொரிசியஸ் பிலிக்நோட்



*பிறந்தது* - 1.8.1978 ஹராரே
*அணிகள்* - மஷோனாலாண்ட், சிம்பாப்வே
*சுருக்கமாக*- அன்டி பிலிக்கோட்.
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்
டெஸ்ட் அறிமுகம் - எதிர் பங்களாதேஸ் 2000/01
ஒருநாள் அறிமுகம் - எதிர் மேற்கிந்தியத் தீவுகள் 1999/2000
எட்டு டெஸ்ட்களில் 323 ஓட்டங்கள், 29 விக்கெட்டுகள். சர்வதேச ஒருநாள் போட்டிகள்- 16, 245 ஓட்டம், 14 விக்கெட்டுக்கள்.

### டியோன் டிக்பி இப்ராஹீம்




*பிறந்தது* - 8.7.1980 புலவாயோ
*அணிகள* - மூன்று பிராந்திய அணிகள,சிம்பாப்வே
*சுருக்கமாக* - டியோன் இப்ராஹீம்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.
டெஸ்ட் அறிமுகம் - எதிர் பங்களாதேஷ் 2000/01
ஒருநாள் அறிமுகம் - எதிர் பங்களாதேஷ் 2000/01
சர்வதேச ஒருநாள் போட்டிகள்- 36, 706 ஓட்டம். ஒரு சதம், ஒரு அரைச்சதம். பொதுவாக ஒருநாள் போட்டிகள்- 52, 907 ஓட்டங்கள். கூடிய ஓட்டம் 121. நிறையக் கற்க விரும்புபவர். தனது துறையை கூர்மைப்படுத்த முனைபவர். நிறைந்த தொழில் நுணுக்கம் கொண்டவர்.

### சீன் மைக்கல் எர்வின்

*பிறந்தது* - 6.12.1982 ஹராரே
*அணிகள்* - CFX ACADEMY, மிட்லண்ட்ஸ்
*சுருக்கமாக* - சீன் எர்வின் மற்று சியூக்
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.
ஒருநாள் போட்டி அறிமுகம் - எதிர் இங்கிலாந்து 2001/02
ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 13, ஓட்டம் 149. 11 விக்கெட் தன் கணக்கில். பொதுவில் 4 அரைச் சதங்கள்.

### அன்ட்ரு பிளவர்



*பிறந்தது* - 28.4.1968 (தென்னாபிரிக்கா)
*அணிகள்*- மஷோனாலாண்ட், மெரில்போண் கிரிக்கெட்கிளப் சிம்பாப்வே. எசெக்ஸ் (இங்)
*சுருக்கமாக* - அண்டி பிளவர்
இடதுகைத்துடுப்பாட்ட வீரர்
வலதுகை **OFF BREAK.**
விக்கெட் காப்பாளர்.
டெஸ்ட் அறிமுகம்- எதிர் இந்தியா 1992/93
ஒருநாள் அறிமுகம் - எதிர் இலங்கை 91/92
63 டெஸ்ட், 5000 ஓட்டங்கள். 12 சதம், 27 அரைச்சதம். 205 சர்வதேச ஒருநாள் போட்டிகள், 6454 ஓட்டங்கள். 4 சதம், 52 அரைச்சதம். பொதுவாக- 297 ஒருநாள் ஆட்டம், 9523 ஓட்டங்கள். 6 சதம், 77 அரைச்சதம். உயர்தர துடுப்பாட்ட+ விக்கெட் காப்பு வீரர். எந்தச் சிறந்த பந்து வீச்சையும் சமாளிக்க கூடியவர். ஒரு சகலதுறை ஆட்ட வல்லமை. அணித்தலைமை+ துடுப்பாட்டம் + விக்கெட்காப்பு= அதிகூடிய சுமை, ஆகவே தலைமையை விட்டு விடுகிறார். சிம்பாப்வேயின் முதல் டெஸ்ட் வெற்றியில் (எதிர் பாகிஸ்தான்) இவர் எடுத்த ஓட்டங்கள் 156. அணியில் தவிர்க்க முடியாத வீரர்.

### ட்ராவிஸ் ஜோண் பிரெண்ட்



*பிறந்தது* - 7.1.1981 மிட்லண்ட்ஸ்
*அணிகள்* - CFX அக்கடமி, சிம்பாப்வே மிட்லண்ட்ஸ்
*சுருக்கமாக* - ட்ராவிஸ் பிரெண்ட், டெஸ ரொஸ்ட்ரோண், சணக்ஸ்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.
டெஸ்ட் அறிமுகம் - எதிர் இந்தியா 2001
ஒருநாள் அறிமுகம் - எதிர் நியூசிலாந்து 2000/01
டெஸ்ட் ஆட்டங்கள்- 10, 339 ஓட்டம். 23 விக்கெட், சிறந்தது 5/31. சர்வதேச ஒருநாள் போட்டிகள்- 39, ஓட்டம் 395, விக்கெட் 36, சிறந்தது 4/55 .

### கிராண்ட் வில்லியம் பிளவர்



*பிறந்தது* - 20.12.1970 ஹராரே
*அணிகள்* - மஷோணாலான்ட் - செஷடியர் - MCC லீஸ்டர்ஷயர் சிம்பாப்வே.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
இடதுகை மென் **ORTHODOX**
டெஸ்ட் அறிமுகம் - எதிர் இந்தியா 92/93
ஒருநாள் அறிமுகம் - எதிர் இந்தியா 92/93
டெஸ்ட்- 63, ஓட்டங்கள் 3359. 6 சதம் 15 அரைச்சதங்கள். 25 விக்கெட்டுக்கள் சிறந்தது 4/41, ஒருநாள் சர்வதேசப் போட்டி- 192,ஓட்டங்கள் 5809, சதம் 6, அரைச்சதம் 34, விக்கெட்டுக்கள் 74. உலகின் தலைசிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களில் ஒருவர். **GULLY** நிலையில் கனதியான களத்தடுப்பு. மிகுந்த அனுபவம் கொண்டவர். அணிக்கும் எந்தவொரு ஆட்டத்திற்கும் அச்சாணி. சளைக்காமல் வெற்றிக்காக போராடும் இயல்பு கொண்டவர்.

### டக்ளஸ் டவாட்ஸ்வா ஹொண்டோ




*பிறந்தது* - 7.7.1979 புலவாயோ
*அணிகள்* - CFX அக்கடமி, மிட்லண்ட்ஸ் சிம்பாப்வே
*சுருக்கமாக*- டக்ளஸ் ஹொண்டோ
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை வேகப்பந்து வீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் தென் ஆபிரிக்கா 2001/02
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 2001/02
டெஸ்ட் அனுபவம் குறைவு. 13 ஒருநாள் சர்வதேச போட்டிகள். 21 விக்கெட்டுக்கள். திறமை 4/37. பந்து வீச்சே முதன்மை. களத்தில் சகலராலும் கவரப்பட்டவர். மிக உற்சாகமானவர்.

### டக்ளஸ் அந்தனி மெரிலியர்

*பிறந்தது* - 24.04.1978 ஹராரே
*அணிகள்* - மிட்லண்ட்ஸ்- சிம்பாப்வே



## சிம்பாப்வே




*சுருக்கமாக* - டக்ளஸ் மெரிலியர்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை **OFF BREAK**
விக்கெட் காப்பாளர்.
5 டெஸ்ட் ஆட்டங்கள், 185 ஓட்டங்கள். 11 விக்கெட்டுக்கள். ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள்- 35, 419 ஓட்டங்கள். 25 விக்கெட்டுகள். திறமை 4/38. இவற்றை விடவும் 50 இற்கு மேற்பட்ட ஒருநாள் ஆட்டங்களில் ஆடியவர். வளர்ந்துவரும் இளம் நட்சத்திரம். மிகப்பயங்கரமான கார் விபத்தில் சிக்கியும் (பாடசாலை நாட்கள்) பின் மீண்டெழுந்த அதிர்ஷ்டசாலி. கழகங்களில் பயிற்றுநர். பாடசாலை மாணவனாக நிறையச் சதம் போட்டவர். இங்கிலாந்துக் கழகங்களில் விளையாடியவர். ஆரம்பம் அல்லது மேல் வரிசை துடுப்பாட்டத்தை விரும்புவார். புது விதமாக தோளுக்குமேலாக அடிக்கும் புதுப் பாணியை அறிமுகமாக்கியவர். இது **MERILLIER SHOT** எனப்பட்டது.

## நாளும் ஒரு வினா

**1975, 1979 போட்டிகளில் டெஸ்ட் அந்தஸ்து இன்றிப் பங்கேற்ற அணியொன்று பின்னாளில் டெஸ்ட் அந்தஸ்து பெற்றது மட்டுமன்றி உலகக் கிண்ணத்தையும் வென்றது அது எந்த அணி?**

**இலங்கை**
**(1996)**

### பிறையன் அன்ட்ரு மேர்பி




*பிறந்தது* - 1.12.1976 ஹராரே
*அணிகள* - சிம்பாப்வே மற்றும் சிம்பாப்வே கழகங்கள்
*சுருக்கமாக* - பிறைன் மக்பி.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
**LEG BREAK GOOGLY**
*டெஸ்ட் அறிமுகம* - எதிர் மே.இந்தியா 99/2000
*ஒருநாள் அறிமுகம* - எதிர் பாகிஸ்தான் 99/2000
26 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியவர். ஒருநாள் ஆட்டங்கள் என்ற வகையில் 50 இற்கு மேல். சிம்பாப்வே திடீரென மூன்று சுழல் பந்து வீச்சாளர்களை இழக்க, அந்த அதிர்ஷ்டம் இவருக்கு கிடைத்தது (2000). குறுகிய காலம் அணித்தலைவராக இருந்தவர். காயங்கள்பட்டு ஆட்டங்களில் இடைவெளிகள். இங்கிலாந்தின் கழக அணிகளில் ஆடியவர். அதிர்ஷ்டமும், துரதிர்ஷ்டமும் மாறிவந்தும் அதிர்ஷ்டம் தொடர்ந்து முன்னணி வகித்தது.

### டாடென்டா டைபூ



*பிறந்தது* - 14.05.1983 ஹராரே
*அணிகள* - மஷோணாலாண்ட், சிம்பாப்வே.
*சுருக்கமாக* - டாடென்டா டைபூ மற்றும் டிப்லி
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை **OFF BREAK**
விக்கெட் காப்பாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் மே.இந்தியா 2001
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் மே.இந்தியா 2002/03
சர்வதேச ஒருநாள் ஆட்டங்கள் 34, ஓட்டங்கள் 385. கூடிய ஓட்டம் 56. **ICC** 19 வயதிற்குட்பட்ட சுற்றுப் போட்டி ஆட்டத் தொடர் நாயகன் (2002) பால் மணம் மாறாத முகம்.

### ஹென்றி காபா ஒலங்கா




*பிறந்தது* - 3.7.1976 சாம்பியா
*அணிகள்* - உள்ளூர் கழகங்கள் மற்றும் சிம்பாப்வே
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 94/95
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தென் ஆபிரிக்கா 2002/03
தேசிய ரீதியில் சர்வதேச அளவில் விளையாடிய முதல் கறுப்பின வீரர். நாட்டின் அதிவேகப் பந்து வீச்சாளர். 98/99 பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் வெற்றியில் தன்னை நிரூபித்தவர். 17 வயதில் முதல்தர கிரிக்கெட்டில் நுழைந்தவர். பந்து வீச்சின் சில பிரச்சினைகள் இருந்தாலும்- டெனிஸ் லிலியின் வழி காட்டலில் சீர்பெற்றது. 95/96 உலகக்கிண்ண அணியின் ஒரு வீரர். நிறைய நண்பர்கள் இவருக்கு. இவரது வேகம் மற்றும் தலையலங்காரம் மனதை விட்டு அகலாது. டெஸ்ட்- 30, விக்கெட் 68. ஒருநாள் சர்வதேசப்போட்டி- 48, 57 விக்கட். முதற்தர ஆட்டம்- 66, 156 விக்கெட்.

### மார்க் அன்ட்ரு வேர்மியூலன்

*பிறந்தது* - 2.3.1979 ஹராரே
*அணிகள்* - சிம்பாப்வே மற்றும் உள்ளூர் கழகங்கள்.
*சுருக்கமாக* - மார்க் வேர்மியூலன்
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை **OFF BREAK**
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 2002/03
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2002/03
12-18-19 வயதுப் பிரிவுகளில் கிரிக்கெட் ஆடி வளர்ந்து வந்தவர். சிறந்த தடகள வீரரும்கூட. 19 வயதிற்குட்பட்ட சிம்பாப்வே அணித்தலைவர். தன்துறையை வளர்த்துக் கொள்ள கடும் பயிற்சிகளுக்குத் தயாரானவர். இளம் வீரர்களால் பின் பற்றப்பட வேண்டியவர். சர்வதேச ஒருநாள் போட்டி- 7, 192 ஓட்டம். பொதுவாக ஒருநாள் போட்டி- 26, 606 ஓட்டம். முதற்தர ஆட்டங்கள்- 30, ஓட்டங்கள் 2297.

### கய் ஜேம்ஸ் விட்டல்



*பிறந்தது* - 5.9.1972
*அணிகள்* - பிராந்திய அணிகள். சிம்பாப்வே.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 93/94
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 2002/03
டெஸ்ட் 46 ஆட்டம், 2207 ஓட்டம். 4 சதம், 10 அரைச்சதங்கள். 51 விக்கெட், சிறந்த பந்து வீச்சு 4/18, சர்வதேச ஒரு நாள் போட்டியில் 141 ஆட்டங்கள் , 2646 ஓட்டங்கள். 11 அரைச்சதங்கள். 84 விக்கெட்டுக்கள் , திறமை 4/35. எல்லைக்களப் பிரதேச திறமையான தடுப்பாளர். துடுப்பாட்டத்துக்காக அணியில் சேர்க்கப்பட்டு எல்லாத்துறையிலும் சோபிக்கிறார். 16 வயதில் பாடசாலைத் தேசிய அணியில் விளையாடி சதம் போட்டவர். பாகிஸ்தான் அணிக்கெதிராக இரட்டைச்சதம் போட்டவர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தலைவருக்கு கொடுத்த வாக்கை இன்று காப்பாற்றிவிட்டோம்!

## யுத்தத்தில் மீட்கப்பட்ட பொருட்களுக்கான நிதிக்கையளிப்பில் தமிழ்க்குமரன்

(யாழ்ப்பாணம்)

எமது தேசியத் தலைவரின் அனுமதி கிடைக்கும்வரை சாவகச்சேரி நகரில் இருந்து ஒரு ரூபா பெறுமதியான பொருட்களைக் கூட எமது போராளிகள் தொடவில்லை. அவரிடம் இருந்து - இந்தப் பொருட்களை உரியவர்களிடம் மிகவும் பாதுகாப்பாக ஒப்படைக்க முடியுமா? என உறுதிமொழி தருமாறு கேட்கப்பட்டு, நாம் அதை வழங்கிய பின்னர்தான், கடும் யுத்தத்தின் மத்தியில்- கிளிநொச்சி, மல்லாவி வர்த்தக சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் முன்னிலையில் இருப்பு எடுக்கப்பட்டு, வீடியோ எடுக்கப்பட்டு, சரியான முறையில் உங்களுடைய பொருட்களை நாம் பாதுகாப்பாக எடுத்துச் சென்று- அதற்குரிய, கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி ரூபாவை இன்று உங்களிடம் கையளிப்பதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஏனென்றால், எமது தலைவருக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்றி நிற்கிறோம் என, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையைச் சேர்ந்த யோ.தமிழ்க்குமரன் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட யுத்தத்தின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட 46 வணிக நிலையங்களின் சொத்துக்களையும், ஆவணங்களையும் நேற்று முன்தினம் பளை வருவாய்ப் பகுதி அலுவலகத்தில் கையளிக்கப்பட்ட நிகழ்வில் பேசும்போதே, அவர் இவ்வாறு கூறினார். அங்கு உரையாற்றிய சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் பீ.என். சற்குணராசா தனதுரையில்-

உறுதியான கொள்கையுடைய எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில், நெறிதவறாத உறுப்பினர்களினுடைய விடாமுயற்சியில் இன்றைய நிகழ்வு நடந்தேறியது. சொன்னதைச் செய்பவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றார்.

## சிறான் அலுவலகம் யாழில் திறப்பு

சிறானின் யாழ்.மாவட்ட இணைப்பு அலுவலக அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் யோ.கபஸ்லிபி, இளஞ்சேரன் ஆகியோரும்,

அரச அதிபர் செ.பத்மநாதன் இணைப்பாளர் ரட்ணம், உதவித் திட்டப்பணிப்பாளர் சிவபாதம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### ராணுவத்தினரை...

இவர்களை விடுவிக்குமாறு கோரியும், கைது செய்தமைக்கு எதிர்புத் தெரிவித்தும் நேற்று மாலை பருத்தித்துறை பொலிஸ் நிலையம் முன்பாக நூற்றுக்கணக்கான மக்கள் கூடி நின்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

### தமிழீழ...

ணம்- மென்பந்து துடுப்பாட்டத்திலும், லெப். கேணல் விக்ரர் நினைவுக் கிண்ணம்- உதைபந்தாட்டத்திலும் மேஜர் அல்பேட் நினைவுக் கிண்ணம்- கரப்பந்தாட்டத்திலும், மேஜர் சோதியா நினைவுக்கிண்ணம்- வலைப்பந்தாட்டத்திலும் வெற்றிபெறும் அணிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதில்- மென்பந்து துடுப்பாட்ட போட்டிகள் காலையிலும், உதைபந்தாட்டப் போட்டிகள் மாலையிலும், கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் இரவு வேளையிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த முறை நடைபெற்ற போட்டிகளில் துடுப்பாட்டத்திற்கான கேணல் சங்கர் நினைவுக்கிண்ணத்தை - முல்லைத்தீவு அணியும், உதைபந்தாட்டத்திற்கான லெப்கேணல் விக்ரர் நினைவுக்கிண்ணத்தையும், கரப்பந்தாட்டத்திற்கான மேஜர் அல்பேட் நினைவுக்கிண்ணத்தையும் - மன்னார் அணியும், வலைப்பந்தாட்டத்திற்கான மேஜர் சோதியா நினைவுக்கிண்ணத்தை முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு அணியும் வென்றிருந்தன.

### பாதுகாப்பு..

இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவிக்கையில், உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயும் ஏராளமான மக்கள் மீளக்குடியேற முடியாத நிலை இருக்கின்றது. அங்கு பொலிசாரும் ராணுவத்தினரும் முகாம்களை அமைத்திருக்கின்றனர் என்றார்.

எனவேதான் உயர் பாதுகாப்பு வலயங்களிலும் மாத்திரமல்ல அதற்கு வெளியே உள்ள பிரதேசங்களிலும் பொதுக்கட்டிடங்களில் படையினர் அமைத்திருக்கின்ற முகாம்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவையும் சந்தித்ததாக தெரிவித்த ஆயர், உயர்பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்படுகின்ற இடங்களிற்கு மாதத்திற்கு ஒரு தடவையேனும் பாதுகாப்பு உயரதிகாரிகள் சென்று வரவேண்டும் எனத் தான் வேண்டுகோள் விடுத்ததாகவும் சொன்னார். அந்த வேண்டுகோளை பாதுகாப்பு அமைச்சர் ஏற்றுக்கொண்டதாகவும் அங்கு மக்களை மீளக்குடிமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பமைச்சர் தன்னிடம் கூறியதாகவும் ஆயர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவிக்கையில், உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அரசாங்கம் கொள்கையளவிலேனும் இணங்கவேண்டும். சமாதான சூழ்நிலையில் அவ்வாறான ஒரு பிரதேசம் தேவையில்லை எனத் தெரிவித்த ஆயர், அரசாங்கம் பாதுகாப்புக் காரணங்களை கூறுவதாக இருந்தால் அதற்கு மாற்று வழிகளை ஏற்படுத்தி குடியேற்றத்திற்கு அனுமதிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சௌந்தரநாயகமும் அதேகருத்தையே வலியுறுத்தினார். (200)

### மீட்கப்பட்ட...

நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன், தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் சிவநாத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி வணிகர் கழகத் தலைவர் சற்குணராசா நன்றி தெரிவித்து உரைநிகழ்த்தினார்.

# 70 மில்லியன் ரூபா திட்டங்களுக்கு ஒருங்கிணைப்புக்குழு அங்கீகாரம்

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ் அரச செயலகத்தில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10 மணியளவில் அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இவ் ஒருங்கிணைபுக்குழுக் கூட்டத்திற்கு- ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்களான அமைச்சர் மகேஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரியும் தலைமை தாங்கினர்.

இக் கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் பத்மநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான விநாயகமூர்த்தி, மாவை. சேனாதிராசா, ரவிராஜ் ஆகியோரும்.

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம், மேலதிக செயலாளர் குமாரதாசன், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சு - யாழ்.மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைச் செய்வதற்கு ஒதுக்கிய 70 மில்லியன் ரூபாவிற்கான செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

### அமெரிக்கா...

வெடிச்சத்தமும் புகையும் வானில் கிளம்பின. தரையிறங்குவதற்கு 16 நிமிடங்களே இருந்தபோது நடந்த இச்சம்பவத்தில் - கொலம்பியா விண்கலத்தின் துண்டுகள் பெருந்தீப்பிளம்புகளுடன் பூமியை நோக்கி விழ ஆரம்பித்தன.

இதையடுத்து கொலம்பியா விணகலம் வெடித்துச் சிதறியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

விண்கலத்தில் பயணம் செய்த கொமாண்டர் ரிக் ஹஸ்பண்ட், பைலட் வில்லியம் மக்கூல், இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட கல்பனா சவ்லா, லோறல் கிளார்க், டேவிட் ப்ரெளன், மைக்கல் அண்டர்சன், இஸ்ரேலின் முதல் விணவெளி வீரரான இலான் ரமோன் ஆகியோர் உடல் சிதறிப் பலியாகியதும் உறுதிப்படுத்தப்பட்டது.

விணகலம் வெடித்துச்சிதறியதை பலரும் கண்டுள்ளனர்.

இதேவேளை- ரெக்ஸாஸ் மாநிலத்தின் மத்திய பகுதியில் விண்வெளிக் கலத்தின் துண்டுகள் வீழ்வது பற்றி - தொலைக்காட்சி ஊடாகவும், வானொலி ஊடாகவும் நாஸா அதிகாரிகள் எச்சரிக்கை செய்தனர்.

உடனடியாக அவசரகால நிலையும் பிரகடனம் செய்யப்பட்டது.

விண்கலம் தரையிறங்குவதாக இருந்த பகுதியில் காத்துநின்ற முக்கிய பிரமுகர்களும், விண்வெளி வீரர்களின் உறவினர்களும் உடனடியாகப் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி கேள்வியுற்றதும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் - இஸ்ரேலியப் பிரதமருடன் தொடர்புகொண்டு பேசினார்.

இஸ்ரேல் தனது முதலாவது விண்வெளி வீரரை இழந்தது பற்றி அவர் துயர் பகிர்ந்ததாக நாஸா தெரிவித்தது. தொடர்ந்து நேற்று நள்ளிரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றி - தேசிய துக்கதினத்தை புஷ் பிரகடனப்படுத்தினார்.

வெடித்துச்சிதறிய கொலம்பியா விண்கலம் 1981இல் தனது முதலாவது விண்வெளிப்பயணத்தை ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - 1986இல் ‘சலஞ்சர்’ என்ற அமெரிக்க விண்கலம் விண்வெளிக்கு புறப்பட்ட சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறியதால் ஏழு விண்வெளி வீரர்கள் அவ்விபத்தில் கொல்லப்பட்டதும் மறக்க முடியாத சம்பவமாகும்.

### சிறுவர் நலனை...

இயக்கத்தில் சேருவதற்காக வந்த 350 சிறுவர்களை மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைத்து விட்டோம் என தமிழ்ச்செல்வன் கூறியதாகவும் சொன்னார்.

அவ்வாறு சிறுவர்களை பெற்றோரிடம் மீண்டும் புலிகள் ஒப்படைத்தனரா என்பது குறித்து என்னால் உறுதியாகக் கூறமுடியாது. ஆனாலும், வன்னியில் நான் அவதானித்த வரை புலிகளின் செயற்பாடுகள் சிறுவர்களின் நல உரிமைகளைப் பேணுவதாக இருக்கின்றது.

சிறுவர் தொடர்பான கல்வி விடயங்களிலும் புலிகள் அக்கறையாக இருக்கின்றனர் என்று தெரிவித்த அவர், இம்மாதம் சிறுவர் பெண் கள நல உரிமை தொடர்பான மாநாடு ஒன்று இங்கு நடைபெறவுள்ளதாகவும் கூறினார்.

அந்த மாநாட்டில் அரசாங்கத்தினதும் புலிகளினதும் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் சாத்தியப்படக்கூடிய மாற்றங்கள் ஏற்படும் என்ற ஏதுநிலை இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய பெலாமி,

மனித உரிமை விடயங்களில் புலிகளும் அரசாங்கமும் அக்கறை செலுத்துவதையிட்டு பாராட்டினார்.

சில ஊடகவியலாளர்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிரானதும் சிறுவர்களைப் படையில் சேர்க்கும் சர்ச்சையை பெரிதுபடுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்பிவிடக் கூடிய வகையிலான கேள்விகளை பெலாமியிடம் தொடுத்தபோதும், அந்தக்கேள்விகளுக்கு அவர் தக்க பதிலடி கொடுத்தார். சில கேள்விகளை அவர் நிராகரித்தார். (200)

உலகின் முன்னணி தொழினுட்ப வல்லுநர்களால் பாவிக்கப்படும் இக்குறியீட்டின் அர்த்தம்......... உங்களுக்கு?

புதிய பிரிவுகள்

பல மாணவர்களின் வேண்டுகோளிற்கு அமைய விரும்பும் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன.



Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Video Mixing
Visual Basic
Java Programming

STP Computer World (Pvt,.) Limited
54A, Kantharmadam, Jaffna. Branch: Sankaththanai, Chavakachcheri

# மரண அறிவித்தல்

## கந்தையா செல்லம்மா

**புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா செல்லம்மா 31.01.2003ல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற காட்டுமுத்தர் - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகளும் காலம் சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும் செல்வராணி, காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை (முன்னாள் வர்த்தகர் கோபால் அன்சன்ஸ், யாழ்ப்பாணம்) மற்றும் கமலாதேவீ, ஜெகநாதன்(துரை) (வர்த்தகர், புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத்தாயாரும், நாகலிங்கம், கமலாதேவி (கனடா), மகேந்திரன் (நீர்கொழும்பு), ஜெயமணிகமலா ஆகியோரின் மாமியாரும் காலம் சென்ற யோகம்மா, மற்றும் தங்கம்மா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், நாகேஸ்வரி, ராதா, சௌந்தரராஜன் (பிரான்ஸ்), ல்தா (சுவிஸ்), சுந்தரராஜன் (லண்டன்), அன்பன் (வர்த்தகர், கொழும்பு), ஜெயந்தன் (கனடா), தர்சினி (சுவிஸ்), சயந்தன் (கனடா), சுகனியா (கனடா), தீபன் (கனடா), கரன் (சுவிஸ்), பவான் (சுவிஸ்), பாமா (சுவிஸ்), ஜீவன் (பிரான்ஸ்), மதியன், பாமினி, பத்மநாதன், பத்மப்பிரியா, ஜெயப்பிரியா, பத்மசீலன், பத்மரூபன் ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.**

**அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து இன்று (02-02-2003, ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் கேரதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்,
மகன் ஜெகநாதன்
(துரைராசா)

4ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(226)

# அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

**புதிய உயர் கல்லூரியில் இன்று 02.02.2003 நடைபெற இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு, தவிர்க்க முடியாத காரணத்தினரல் 16.02.2003 (ஞாயிறு) அன்று அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

*புதிய உயர் கல்லூரி மாணவர் ஒன்றியம்,*
*ஆரியகுளம் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

(225)

# கண்ணீர் அஞ்சலி

**திரு. மனோகரன்** (Manoj Express G.S.A Serendib Air Line, Jaffna) **அவர்களின் அன்புத்தாயார் திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் 29-01-2003ல் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.**

*கி.அ. ஜெயகாந்தன்*
*(நமது ஈழநாடு)*

(சி/548)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.